Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 12 புதன்கிழமை (28.12.2011) பக்கங்கள் 16 ஓசை – 88

ராம்கோ




RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து

(C/1105)



தமிழகத்தின் அடுத்த முதல்வர் (12)




புத்துயிர் பெறும் பாசிசம்? (11)



யாழில் அதிபர்களுக்கு மடிக்கணினி (04)




56 விமான நிலையங்கள் (06)

# முத்தரப்பு பேச்சுவார்த்தைக்கு முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக முத்தரப்பு பேச்சுக்களை நடத்த வேண்டும் என்றும் அரசுக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் நடத்தப் பட்டுவரும் பேச்சுக்களின் போது முஸ் லிம் காங்கிரஸ் கட்சியும் பங்குபற்ற வேண்டும் என்ற புதிய ஆலோசனை ஒன்று இக்கட்சியால் முன்வைக்கப்பட்டி ருக்கிறது.

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கும் இடையில் இதுவரை பல சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன. எனினும் இதுவரை எந்தத் தீர்வுகளும் எட்டப்படவில்லை. இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர்களுக்கு மிடையில் உத்தியோகபற்றற்ற சந்திப் புக்கள் வார இறுதியில் இடம்பெற்றன.

இச்சந்திப்புக்களிலேயே மேற்படி முத் தரப்பு பேச்சுக் கான ஆலோ சனை முன் வைக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும், அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளில் இணைந்து கொள்வது தொடர்பில், ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ் அரசாங்கத்திடமே தமது கோரிக்கைகளை முன்வைக்க வேண்டு மென கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பிற்கும் அரசாங்கத்திற்கும் இடையில் தொடர் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன. (15 ஆம் பக்கம் பார்க்க)

## பெறுபேறுகளில் சந்தேகமா? திருத்தங்களுக்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறு பேறுகளின் திருத்தங்களுக்கு டிசம்பர் 29 முதல் 2012 ஜனவரி 9 ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம் என பரீட் சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

2011 ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற இந்தப் பரீட்சைகளின் பெறுபேறுகளை கடந்த 25 ஆம் திகதி பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டது. இந்தப் பெறுகளில் பல தவறுகள் காணப்படு வதாக சிலர் கூறியுள்ள நிலையில், மாவட்ட மற்றும் தேசிய ரீதியான தரவரி சையில் மாத்திரமே தவறுகள் காணப் படுவதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. எனினும் பரீட்சைப் பெறுபேறுகளில் சந்தேகம் கொண்ட மாணவர்கள் திருத்தங்களுக்கு விண் ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட் டுள்ளது.

## காணி, பொலிஸ் அதிகாரம் மாகாணங்களுக்கு அவசியம்



(கொழும்பு)

மாகாணங்களுக்கு காணி மற் றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந் திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கோரியுள்ளது. 13 ஆம் திருத்தச் சட்ட மூலத் தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங் கள் அமுல்படுத்தப்பட வேண்டு மெனவும் கோரியுள்ளது. 13 ஆம் திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்துவது குறித்த அர சாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றம் அவசியம் என ஸ்ரீலங்கா (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழப் பிரசாரங்களுக்கு முற்றுப்புள்ளி ஆஸி. இலங்கையர்கள் கோரிக்கை

(கொழும்பு)

புலிகள் ஆதரவாளர்களின் ஈழப் பிரசாரங்களை முறியடிப்ப தற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவுஸ்ரேலிய வாழ இலங்கையர்கள், இலங்கை அர சாங்கத்திடம் கோரிக்கை விடுத் துள்ளனர். அவுஸ்ரேலிய வாழ் இலங்கையர்களின் சார்பில் கலாநிதி காமினி குணதிலக்க இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளார். புலிகளின் தமிழர் தாயகம் என்ற மாயையைக் களைவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போலியான பிரசாரங்களி னால் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இந்தப் புலிகளின் போலிப் பிரசாரங்க ளுக்கு எதிராக முடிந்தளவு நட வடிக்கை எடுக்கப்படும். இந்த நடவடிக்கைகளுக்கு இலங்கை யின் வெளிவிவகார அமைச்சும், அரசாங்கமும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். புலிப் பயங் கரவாதத்தை இல்லாதொழித்த தனைப் போன்றே அரசாங்கத் தின் பிழைகளும் திருத்திக் கொள்ளப்பட வேண்டும். அர சாங்கத்தின் அபிவிருத்தித் திட் டங்கள் குறித்து வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கும் தெளிவுபடுத்த வேண்டும்.

இலங்கை வாழ் தமிழர்கள் (15 ஆம் பக்கம் பார்க்க)

## போதைப்பொருள் பாவனை; ஒழிப்பதற்கு விசேட திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் போதைப் பொருளை முற்றாக ஒழிப்பதற் கான நடவடிக்கைகளுக்காக 2012 ஆம் ஆண்டு முதல் விசேட செயற்திட்டமொன்று யாழ். பொலிஸ் நிலையத்தினால் மேற் கொள்ளப்படவுள்ளதாக பொலிஸ் நிலைய தலைமை பொறுப் பதிகாரி சமன் சிகேரா தெரிவித் தார்.

யாழ். பொலிஸ் நிலையத் தில் நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டுள்ளார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், யாழில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளமை தொடர்பாக பல தகவல்கள் கிடைத்துள்ளன.

போதைப் பொருட்கள் யாழில் புழக்கத்தில் இருப்பதாகவும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற் காக விசேட செயற்திட்டம் நடை முறைப்படுத்தப்பட்டு பொலிஸ் (15 ஆம் பக்கம் பார்க்க)

## பெண்ணின் சடலம் மல்லாகத்தில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் பழம்பிள்ளையார் கோவில் பகுதியிலுள்ள வீடு ஒன்றின் கிணற்றிலிருந்து திரு மணமாகாத பெண் ஒருவரின் சடலம் தெல்லிப்பளை பொலி ஸாரினால் மீட்கப்பட்டு நேற்று யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள் ளது.

மல்லாகம் பழம் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த நாரண பிள்ளை விஜயலட்சுமி (வயது - 46) என்ற பெண்ணினுடைய (15 ஆம் பக்கம் பார்க்க)

## மொழி விருத்திக் கற்கை யாழில் ஆரம்பிக்க ஏற்பாடு


(யாழ்ப்பாணம்)

கல்விசார் ஊழியர்களுக்கான மேலதிக மொழிவிருத்திக் கற்கை நெறிக்கு மீண்டும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கைநெறிக்கு ஏற்கனவே விண்ணப்பித்து தகுதியான வர்களுக்கும், விண்ணப்பிக்க இருப்பவர்களுக்குமான நேர்முகத் தேர்வு அடுத்த மாதம் 21 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பயிற்சிநெறிகள் 22 ஆம் திகதி முதல் வார இறுதி நாட்களிலும், பாடசாலை விடுமுறை தினங்களிலும் ஒவ்வொரு மாதத்திலும் 4 நாட்கள் நவம்பர் 2012 வரை நடைபெறும். கற்கைநெறி மொடியூல்களினூடாகவும், நேர்முகத் (15 ஆம் பக்கம் பார்க்க)

## கீரிமலை இந்து மயானம் தகனக்கிரியைக்கு அனுமதி



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக் கிலுள்ள கீரிமலை இந்து மயானத்தை பாவனைக்கு விடு மாறு பொதுமக்கள் மேற்கொண்ட ஆர்ப் பாட்டத்தை தொடர் ந்து நேற்று முதல் அம்மயானம் பொது மக்களின் பாவ னைக்கு விடப்பட்டுள்ளது. கீரிமலை மயானத்தை பாவனைக்கு விடுமாறு கோரி கீரிமலைச் சந்தியில் ஒன்றுகூடிய பொதுமக்கள் மரணமடைந்த ஒருவரின் சடலத்துடன் நேற்றுக் காலை ஆர்ப்பாட்ட மொன்றில் ஈடுபட்டனர். (15 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகள் மீறப்பட்டால் விசாரணை செய்ய அரசு தயார்

(கொழும்பு)

இறுதிப் போரின்போது மனித உரிமைகள் மீறப்பட்டிருந்தால் அது குறித்து விசாரணை நடத் தவும், சூத்திரதாரிகளுக்கு தண் டனை வழங்கவும் அரசு தயாரா கவே இருப்பதாக வெளிவிவ கார பிரதி அமைச்சர் நியோமால் பெரேரா தெரிவித்துள்ளார்.

அத்துடன் இனப்பிரச்சினைக் கான அமைதித் தீர்வு தொடர் பாக இந்தியா வெளியிட்டிருக் கும் கருத்துகளை இலங்கை அரசு முழுமனதுடன் ஏற்றுக் கொள்வதாகவும் வெளிவிவகார பிரதி அமைச்சர் நியோமால் பெரேரா தெரிவித்தார். இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச் சாளர் வெளியிட்ட கருத்துகள் தொடர்பாக செய்தியாளர்கள் வினவிய போதே பிரதி அமைச் சர் மேற்கண்டவாறு கூறினார்.

ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசி யல் (15 ஆம் பக்கம் பார்க்க)



# காரைநகரில் மீனவர் பிரச்சினைகள் துரித கதியில் தீர்வுகாண நடவடிக்கை

(காரைநகர்)

காரைநகரில் கடற்றொழிலாளர்கள் எதிர் நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து விரைவான தீர்வுகளைக் காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதற்காக விடேச கூட்டமொன்ற காரைநகரில் நேற்று நடைபெற்றது.

காரைநகர் உதவி அராங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் தலைமையில் இடம் பெற்ற இக்கூட்டத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் காரைநகர் அமைப்பாளரும், பிரதேசசபை எதிர்க்கட்சி தலைவருமான என். கண்ணன், கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் கடற்றொழிலாளர் சமாசத்தின் தலைவர் பொ.கணேஷ், கிராம சேவையாளர்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பணிமனை உத்தியோகத்தர்கள், காரைநகர் கடற்படை பொதுசன தொடர்பு அதிகாரி, ஊர்காவற்றுறை பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தடை செய்யப்பட்ட வலைகள் பாவித்தல், இறால் கூடு வைப்பதற்கான இடப்பிரச்சினை, மீன்பிடி வலைகள் கடலில் களவு போதல், காரைநகர் குடாக்கடலில் வலிச்சல் வலை செய்தல் போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

இதில் உதவி அரசாங்க அதிபர் உரையாற்றுகையில், எம்மால் தீர்க்கப்படக்கூடிய பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் தீர்க்க முடியாத பிரச்சினைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம், தங்கள் சமாசம் மூலம் மகஜர் அளித்து, அதற்கான தீர்வைப் பெற்று தருவதாகவும் கூறியிருந்தார். ஏற்கனவே வடமாகாண மீனவர்களின் பிரச்சினைகள் நீண்ட காலமாக தீர்க்கப்படாது இருந்த போதும், அமைச்சரால் தற்போது தீர்வு காணப்பட்டு வருகின்றது என்பதை அனைவரும் அறிவீர்கள். வெவ்வேறு பிரதேசத்துக்கான பிரச்சினைகளை அமைச்சரால் தீர்க்க முடியும். இப்பிரச்சினை தொடர்பாக அவரிடம் தெரிவித்து அதற்கான தீர்வைப் பெற்றுத் தருவதாகவும் கூறியிருந்தார்.

மேலும் எழுவைதீவு, அனலைதீவு, ஊர்காவற்றுறை, சுருவில் ஆகிய இடங்களிலிருந்து வருகின்ற மீனவர்கள், காரைநகர் தரவைக் கடலில் படுப்பு வலைகளை அறுத்து எறிவதாக நமது பிரதேச கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் பொ.கணேஷ் தெரிவித்தார். இது தொடர்பாக அந்தந்தப் பகுதி சமாசங்களுக்குகடிதங்களை அனுப்புவதற்கும், அதனைச் செய்து தருவதாகவும் கூறியிருந்தார். மற்றும் சாதாரண பிரச்சினைகளுக்கு ஓரிரு நாட்களில் காரைநகர் பிரதேசபை எதிர்க்கட்சித் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி காரைநகர் அமைப்பாளருமான வி. கண்ணனுடன் இணைந்து பிரச்சினைக்கான தீர்வினைக் காண்பதாகவும் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

## டெங்கு ஒழிப்பு காரைநகரில் தீவிரம்

(காரைநகர்)

நாட்டில் பரவி வருகின்ற டெங்கு நோயானது எமது பிரதேசத்தை தாக்காதிருக்க அதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக காணி உரிமையாளர்கள் தங்களது சொந்தக் காணிகளில் உள்ள பற்றைகளை வெட்டியும் பொருட்களை அப்புறப்படுத்தியும் அவற்றைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என காரைநகர் பிரதேசபை தவிசாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

துப்புரவு செய்யும் போது வருகின்ற கழிவுகளை அதற்கென ஒதுக்கப்பட்ட பகுதி யான தில்லைச் சுடலையில் போடுவதற்கு பிரதேச சபையால் ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட் டுள்ளது. அதற்கு காணி உரிமையாளர்கள் முற்கூட்டியே பிரதேச சபைக்கு அறிவித்தல் தரும் பட்சத்தில் சபையின் வாகனம் மூலம் குப்பைகள் அகற்றப்படும். துப்புரவு செய்யப்படாத காணி உரிமையாளருக்கு எதிராக 2007 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க நுளம்பு பெருக்கத் தடுப்பு சட்டத்தின் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.



சுனாமியின் 7ஆவது ஆண்டு நினைவுகளை முன்னிட்டு வலி. வடக்கு கலாசாரப் பேரவை நடத்திய சுனாமிப் பேரலையின் கோர நிகழ்வுகள் சம்பந்தமான ஆய்வரங்கு மற்றும் சிற்பக் கண்காட்சி துர்க்காபுரம் சிற்பாலயக் கலைக்கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போது யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆய்வுரை நிகழ்த்துவதையும், புகழ்பெற்ற சிற்பக்கலைஞர் ஏ.வி.ஆனந்தனால் செதுக்கப்பட்ட சிற்பங்களின் ஒரு தொகுதியை பார்வையாளர்கள் பார்வையிடுவதையும் காணலாம். (பா.சிகான்)


## அருள்ஞான ஜோதிடம்

அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடப்பது, நடக்கப்போவது இவற்றுடன் எனது அருள் ஞான ஜாதகக் கணிப்பினால் மை வெளிச்சம் போல் உங்கள் வாழ்க்கையைத் தெரிந்துகொள்ளலாம். அத்துடன் ஒருவர் என்னிடம் 4 ஜாதகங்களுக்கு மேல் கணிப்பு செய்து எடுத்தால் Gem Cooperation உத்தரவாதக் கடிதத்துடன் அவர்களுக்கு அதிஷ்டம் தரக்கூடிய அதிஷ்டக் கல்லை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.தேசபந்து, பேராசிரியர். P.K.சாமி J.P.ஐயா. ஸ்ரீ துர்க்காதேவி அருள் சக்தி இல்லம், இல. 23, மேபீல்ட் வீதி, கொழும்பு - 13. 011234263/64. (வீண் அலைச்சலை தவிர்க்க முன கூட்டியே அறிவித்து, அந்த நேரத்தில் மாத்திரம் வரவும். (C/1102)



## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1141)


# சின்னஞ்சிறு செய்திகள்

## புளியங்குளம் விபத்து! பத்து பயணிகள் காயம்

(வவுனியா)

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பேருந்து வேகக்கட்டுப்பாட்டை இழந்து பாதையில் இருந்து விலகி விபத்துக்குள்ளானது.

நேற்று மாலை 5.00 மணியளவில் புளியங்குளப் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் 10 பயணிகள் சிறு காயங்களுக்கு உட்பட்டனர். (18)

## அதி உயர் மழை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இந்த மாதம் 258.9 மில்லி மீற்றர் அளவு மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வானிலை அவதான மையம் தெரிவித்துள்ளது.

இந்த மாதம் முதலாம் திகதியில் இருந்து நேற்றைய தினம் வரைக்கும் 258.9 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், இந்த வருட ஆரம்பத்திலிருந்து நேற்றைய தினம் வரைக்கும் 1421.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் வானிலை அவதான மையம் தெரிவித்துள்ளது. (எஸ்)

## யா/மத்திய கல்லூரியின் 1 ஆம் தவணை ஆரம்பம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் சாதாரண தர வினாத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறுவதன் காரணமாக முதலாம் தவணைக்கான கல்விச் செயற்பாடுகள் அடுத்த மாதம் 09 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் என பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

## மக்கள் பார்வைக்கு

(மானிப்பாய்)

மானிப்பாய் பிரதேசசபையின் 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் 1987 ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்துக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டு, பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் இவ்வரவு செலவுத்திட்டத்தினை தலைமை அலுவலகம், உப அலுவலகங்களில் இன்று தொடக்கம் பார்வையிடலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## படகு இயந்திரம் திருடியவர் கைது

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் கடற்கரைப் பகுதியில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான படகு இயந்திரத்தை திருடிய நபர் நேற்று முன்தினம் வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

குறித்த பகுதியில் கடந்த 13 ஆம் திகதி படகு இயந்திரம் திருடப்பட்டுள்ளது. உரிமையாளர்களினால் நேற்று முன்தினம் வட்டுக்கோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் மாலை திருடியவர் கைது செய்யப் பட்டு நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படதாக பொலிஸார் தெரிவித்தனர். (எஸ்)

## வாழ்க வளமுடன்

**தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்**

முதலாவது அகவையில்

பெயர் : முகமட் இம்ரான் பாதி அகமட்,
முகவரி: 355,மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.






**பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்**


இதோ! Special Offer Special Offer Special Offer

27.12.2011 - 31.12.2011 ஆகிய காலப்பகுதியில் பொருள்களைக் கொள்வனவு செய்வோர்க்கு விசேட சலுகையுடன் மாதாந்த இலகுதவணைக் கட்டண முறையிலும் பெற்றுக்கொள்ள உடனே நாடுகள்....

இப்போது 2 வருட உத்தரவாதத்துடன்...




(C/1155)

திருமுருகன் கொம் நெற்

இல. 259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 7835

Debug Authorized Distributor

கிளைகள்: இல.18, பிரதான வீதி, நெல்லியடி. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு - 2. இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. இல. 05,இரணைமடு பிரதான வீதி, கிளிநொச்சி.

உங்கள் சிந்தனையை உடலுடன் இணைத்து உழைக்க வைத்துவிட்டால் எந்தச் செயலிலும் சுறுசுறுப்பும், திருப்தியுமே ஏற்பட்டுவிடும்.

- சின்மயானந்தர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## ஏகப்பிரதிநிதித்துவ ஒற்றுமை!

இப்போது தெளிவாகத் தெரிகிறது. நாலைந்து மாடுகள் வேறு வேறு திசைகளில் இழுத்துக் கொண்டிருக்கும் ஒரு வண்டிலில், தமிழ்மக்கள் தெரியாத்தனமாக ஏறி இருந்துகொண்டு திரு திருவென முழித்துக் கொண்டிருப்பது போன்ற ஒரு காட்சி.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பத்திலிருந்தே தங்களுக்குள் ஒருவர் பின்னால் ஒருவர் குழிபறித்துக் கொண்டே பாராளுமன்றக் கதிரைகளை மட்டும் பிடித்துக்கொள்ள ஒன்றுபட்டிருக்கும் கூட்டாகத்தான் இருந்திருக்கிறது. இவர்களை வலிந்து ஒரு கயிற்றில் கட்டியவர்கள் புலிகள் என்பதால், இவர்களுக்குள் இருந்த இருட்டடிகளும் முதுகுப்பக்கத் தாக்குதல்களும் பெரிதாக வெளித்தெரிய வரவில்லை.

இவர்களிற் பலரது சுணைமணையற்ற முதுகுத் தோலை இகழ்ந்தபடி முதலில் சங்கரியார் வெளியே வந்தார். ஆனாலும், இவர்கள் தொடர்ச்சியாக அருவருப்பாய்ப் பேசிவரும் ஆயுதக்குழுக்களில் ஒன்றான புலிகளின் அலுவலக வாசலில் போடப்பட்ட வாங்கு ஒன்றில் அமர்ந்து, பொறுமையாக ஐந்தாறு மணிநேரம் காத்திருந்து உதவிப் பொறுப்பாளரின் தரிசனம் பெற்றாவது பாராளுமன்றம் போய்விட வேணும் என்ற 'இலட்சிய வேகம்' கொண்டவர்கள், சங்கரியாரை 'வாழத் தெரியாதவர்' என்ற பார்வை பார்த்துவிட்டுக் காரியமே கண்ணானார்கள்.

புலிகள் முடிவு தெரிந்ததுதான் தாமதம், அவர்கள் நேரடியாகப் பிரேரித்த எம்பிக்களும், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்க் காங்கிரஸ் குழுவினரும், சிறீகாந்தா, சிவாஜிலிங்கமும் கூட்டமைப்புக்கு வெளியே வீசப்பட்டார்கள்.

பிறகு தொடங்கியது மீந்த தமிழரசுக் கட்சியினர்க்கும் முன்னாள் ஆயுதக் குழுக்கள் இரண்டுக்குமிடையிலான குடுமிப்பிடிச் சண்டை! தேர்தல் வந்தாலொழிய மற்றும்படி நமக்குள்ளே ஒற்றுமையாய்ப் பேசிக்கொள்ள எதுவுமேயில்லை என்பதே இவர்களது இன்றைய நடவடிக்கைகளின் சாராம்சம். தமக்குள்ளே ஒன்றுபட்டுப் பேச முடியாதவர்களை நம்மிடையே வைத்துக்கொண்டு, தமிழ்மக்கள் தங்கள் தீர்வுக்காக ஒருமித்துக் குரல் கொடுப்பது எப்படிச் சாத்தியமாகப் போகிறது?

சம்பந்தன் தலைமையிலான குழு அரசுடன் பேசுகிறோம் என்று சொல்லிப் போகும் அதேசமயத்தில், யாழ்ப்பாணத்தில் தனது ஆதரவாளர்களைக் கூட்டி, பேச்சும் வேண்டாம், மாகாணசபையும் வேண்டாம் என்று அறிக்கை எழுதுவித்து வாங்கி தமிழ்த் தேசியத் தீவிர நாடகமாடிக் கொண்டிருக்கிறார் மாவையார்.

ஜனாதிபதியுடன் இரகசியமாக விருந்துண்டு பேசிவிட்டு, அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தை முறியவில்லை இன்னும் தொடரும் என்று சம்பந்தன் கொழும்பிலிருந்து அறிவிக்க, மறுவளமாய்ச் செல்வம் பேச்சுவார்த்தை இனித் தொடராது என்று அடுத்த நாளே பதிலடி கொடுக்கிறார்.

இந்தக் கூட்டமைப்பு தனிக் கட்சியாகப் பதிவு செய்துகொள்ளப்படாவிட்டால், வேறொரு புதிய கூட்டமைப்பை உருவாக்கி கட்சியாகப் பதிவு செய்துகொள்ள வேண்டி வரும் என்று எச்சரிக்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன். இந்தக் கட்சிப் பதிவு என்பதைக் காரணம் காட்டி, கூட்டமைப்பை உடைப்பதற்கு ஜனாதிபதியுடன் இரகசியப் பேச்சு நடத்தியிருக்கிறார்கள் பதிவைக் கோரும் அந்த சிலர் என்று லண்டன் தமிழர்களுக்கு விளக்கமளிக்கிறார் சுமந்திரன்.

ஜனாதிபதியின் வேண்டுகோளைத் தட்ட முடியாமல் காலில் மட்டை கட்டிக்கொண்டு கிரிக்கெட் விளையாட்டுக்குப் போனவர், கட்சி உடைப்புக் கதை கதைக்கலாமோ என்று நக்கல் விடுகிறது, கூட்டமைப்பைக் கட்சியாக்க விடாப்பிடியாக நிற்கும் குழு. சம்பந்தனும் சுமந்திரனும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு கூட்டமைப்பு சார்பில் பெயர்களைத் தருவதாக, ஜனாதிபதிக்கு இரகசியமாய் நம்பிக்கையளித்திருப்பதாகவும் சாடுகிறது கட்சிப் பதிவுக் குழு.

இப்படியாகத்தான் தமிழ்க் கூட்டமைப்பின் 'ஏகப்பிரதிநிதித்துவ ஒற்றுமை' கொடிகட்டிப் பறக்கிறது. முயல் பிடிக்கும் எதையோ அதன் முகத்தைப் பார்த்தே தெரிந்துகொண்டு விடலாம் என்பார்கள். இந்த நாட்டிலுள்ள கணிசமான தரப்புகளுக்கு நமது அரசியலுரிமைப் பிரச்சினையின் நியாயத்தன்மையை விளக்கிவிட முடியும் என்ற நம்பிக்கையும், இணக்கத்தை ஏற்படுத்தி முயன்றால் தீர்வைக் கொண்டுவரலாம் என்பதையும் இவர்களே நம்பாதபோது.... மக்களுக்கு வெறுப்பையும் விரக்தியையும் தவிர வேறென்ன தரமுடியும் இவர்களால்?

- ஆசிரியர்

# வடமாகாண அபிவிருத்திக்காக 5 ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு!

(கொழும்பு)

வடமாகாண அபிவிருத்திக்காக 2012 ஆம் ஆண்டில் 5 ஆயிரம் மில்லியன் ரூபா நிதியை அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ளதாக ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார். இந்நிதியில் முன்னுரிமை அடிப்படையில் முக்கிய திட்டங்களுக்காக 2 ஆயிரத்து 896 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள ஆளுநர் இது தொடர்பான ஒப்பந்தம் ஜனவரி 2 ஆம் திகதி கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் கூறினார்.

முதற் கட்டமாக 2 ஆயிரத்து 896 மில்லியன் ரூபா வட மாகாண சபையின் கீழுள்ள 5 அமைச்சுகளுக்கும் அவற்றின் கீழ் இயங்கும் 24 திணைக்களங்களுக்கும் வழங்கப்படும். இது தவிர குறித்த 5 ஆயிரம் மில்லியன் ரூபாவிற்கு புறம்பாக மேலும் பல மில்லியன் ரூபா மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் வடமாகாணத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதுடன் பெருந்தொகையானோருக்கு தொழில் வாய்ப்புக்களும் நியமனங்களும் வழங்கப்படவுள்ளதாக ஆளுநர் தெரிவித்தார். இது தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன், மாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர். விஜயலெட்சுமி, மாகாண அமைச்சின் அதிகாரிகள் திணைக்கள பொறுப்பாளர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர்.

## நினைவு மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மெய்யியல் கழகம் நடத்தும் மறைந்த பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜாவின் நினைவு மலர் வெளியீடு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக மெய்யியற் கழகத் தலைவர் ம.வினோத் தலைமையில் நடைபெறுவதுடன் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் பிரதம விருந் தினராகவும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம பிள்ளையும் கலந்து கொள்ளவுள்ளனர். (எப்.எஸ்)

## சுனாமி நினைவு நாள் வவுனியாவில் அனுஷ்டிப்பு

(வவுனியா)

வவுனியாவில் சுனாமி நினைவுநாள் நேற்று முன்தினம் பூந்தோட்டம் சுனாமி ஞாபகார்த்த தூபியில் அனுஷ்டிக்கப்பட்டது. பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயத்தால் அமைக்கப்பட்ட நினைவுத் தூபியில் காலை 9.25 மணிக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் வவுனியா நகரசபை தலைவரினால் சுடர் ஏற்றப்பட்டு தூபிக்கு மலர் மாலையும் அணிவிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து மதகுருமார், பொலிஸ் அதிகாரிகள், கிராமிய அமைப்புக்களின் தலைவர்கள், வர்த்தகர்கள் உட்பட பொதுமக்கள் அஞ்சலி தீபம் ஏற்றியதுடன் தூபிக்கு மலர்கள் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை வவுனியா மாவட்டச் செயலகத்தில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் சுனாமி அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றிருந்த நிலையில் மத குருமாரின் அஞ்சலி உரைகளும் இடம்பெற்றிருந்தது. இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட செயலகத்தின் அரச ஊழியர்களும் ஊடகவியளாலர்களும் கலந்துகொண்டனர். (125)

## பூநகரியைச் சேர்ந்த மூவருக்கு கலாபூஷண விருது வழங்கப்பட்டது

(முழங்காவில்)

அண்மையில் கொழும்பில் ஜோன் த சில்வா கலை அரங்கில் நடைபெற்ற இலங்கை அரச 27ஆம் வருட கலாபூஷண விருது வழங்களில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மூவர் கலாபூஷண விருதைப் பெற்றுக் கொண்டனர்.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த திருமதி செ. சோமசேகரம்பிள்ளை (இசை, சமயம்), பூநகரிப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பொன். தில்லைநாதன் (நாடகம், சிறுகதை இலக்கியம்), பளைப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த க. செல்லத்துரை (நாட்டுக் கூத்து, நாடகம்) ஆகியோர் விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.(112)

# பூநகரியூடான அரச பேருந்து சேவை வீதி சீர்கேட்டால் இடை நிறுத்தம்

### அரச உத்தியோகத்தர்கள் அவதி

(முழங்காவில்)

பூநகரி ஊடாக மன்னாருக்கும், முக்கொம்பன், வன்னேரிக்குளம் வரை சேவையில் ஈடுபட்டு வந்த அரச பேருந்து சேவைகள் அனைத்தும் கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக நிறுத்தப்பட்டுள்ளதால் பொதுமக்களும், அரச ஊழியர்களும் பெரும் நெருக்கடிக்குள்ளாகின்றனர். குறிப்பாக உரிய நேரத்துக்கு கடமைக்குச் செல்ல முடியாத நிலை இருப்பதாக பூநகரிப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தமது கவலையைத் தெரிவித்தனர்.

இதேவேளை, கிளிநொச்சியில் இருந்து கௌதாரி முனைக்கு நடத்தப்பட்ட ஒரேயொரு சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது.

பாதைச் சீர்கேடு காரணமாக இச்சேவைகள் நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்ற நிலையில் தனியார் பேருந்து சேவைகள் சித்தன் குறிச்சி, ஞானிமடம் வீதியூடாக சேவையில் ஈடுபட்டு வருகின்றது.

தற்போது பெரும் நெருக்கடியின் மத்தியில் தனியார் பேருந்தில் தமது நாளாந்த பிரயாணத்தை மேற்கொண்டு வருவதாக உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர். (112)

## இளைஞர் சேவை மன்றத்தின் நடப்பாண்டு உறுப்பினர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வலி. தெற்கு உடுவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சுன்னாகம் மயிலணி வடக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் புனருத்தான நடவடிக்கைகள் இளைஞர் சேவைகள் மன்ற அலுவலர் கே. யுகராஜ் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பாண்டிற்கான உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

த. தயாலவன் அமைப்பாளராகவும், இ. தனுராஜ் தலைவராகவும், ஜெ. பாரதி உப தலைவராகவும், ஸ்ரீ. றுசாணி செயலாளராகவும், ம. தர்மிதா உப செயலாளராகவும், அ. அன்ராஜ் பொருளாளராகவும், தே. நிமல்ராஜ் விளையாட்டுச் செயலாளராகவும், ப.படயூரா கலாசார செயலாளராகவும், சி. தமிழினி ஊடகமும், தகவலும் செயலாளராகவும், சி. யகீர்த்தனா தேசிய சேவை செயலாளராகவும், இ. தியாந்தினி கல்வி பயிற்சி தொழில் வழிகாட்டலும் ஆலோசனை செயலாளராகவும், சி. தர்மலிங்கம் கணக்குப் பரிசோதகராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் த. பிரியா, பா. தினிசா, உ.விதுரன் ஆகியோர் ஒழுக்கக் குழுவாகவும், சி.தர்மலிங்கம், மு. அரிகரன், சிவஞானம், த.ஜெயக்குமார், த.ஸ்ரீவாசன் ஆகியோர் ஆலோசனைக் குழுவாகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## உர விநியோகம்

(வடமராட்சி)

பருத்தித்துறை கமநல சேவைகள் திணைக்களத்தினரால் 3ஆம் கட்ட மானிய உர விநியோகம் எதிர்வரும் 30ஆம் திகதி இறுதியாக நிறுத்தப்படவுள்ளதால் புலோலி கிழக்கு, புலோலி தெற்கு, கெருடாவில் வடக்கு, கெருடாவில் கிழக்கு, தொண்டமானாறு வடக்கு, தொண்டமானாறு தெற்கு, துன்னாலை வடக்கு, வல்லிபுரம் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த கமக்காரர் அமைப்புக்கள் உரத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் தவறின் பின்னர் உரத்தைப் பெற முடியாதென பருத்தித்துறை பெரும்போக உத்தியோகத்தர் ரி.கோகுலன் தெரிவித்துள்ளார். (116)

# கடல் நீரேரிக் கதவுகளைத் திறந்து வெள்ள நீரை வெளியேற்றுங்கள்

## பொதுமக்கள் கோரிக்கை

(அச்சுவேலி)

தொண்டைமானாறு கடல் நீரேரிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தடுப்புக் கதவுகள் உரிய நேரத்தில் திறக்கப்படாமையால் அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், நீர்வேலி பிரதேச மக்கள் வெள்ளநீரினால் பெரும் பாதிப்புக்குள்ளாக வேண்டியுள்ளதாகப் பாதிக்கப்பட்டுவரும் பொது மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

தற்போது பெய்துவரும் பருவ மழை காரணமாக யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதிக்கு கிழக்குப் புறமாக உள்ள தாழ் நிலப் பகுதிகளில் தேங்கி நிற்கும் வெள்ள நீரை சமுத்திரத்திற்கு செல்லவிடாத வகையில் தொண்டைமானாறு கடல் நீரேரிக் கதவுகள் முடிவைக்கப்படுகிறது. இதனால் அச்சுவேலி முதல் நீர்வேலி வரையான பகுதிகளைச் சேர்ந்த பல நூற்றுக் கணக்கான குடும்பங்கள் வெள்ளநீருக்கு மத்தியிலேயே வாழ்க்கை நடத்தி வருவதாகவும், இதனால் கால்நடைகளை கட்டி வளர்க்க முடியாதிருப்பதுடன், வீடுகளினுள் வெள்ளம் புகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. இதனால் சிரமப்படும் மக்கள் தமது அன்றாடக் காரியங்களைச் செய்ய முடியாது தவித்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இது விடயத்தில் பொதுமக்களின் நலனைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவ்வப்போது கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் மக்களிற்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (03)

# க.பொ.த. (சா/த) விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பம்

(அச்சுவேலி)

நடைபெற்று முடிந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்களின் முதலாம் கட்ட மதிப்பீட்டுப் பணிகள் நாளை வியாழக்கிழமை முதல் 7ஆம் திகதிசனிக்கிழமை வரை இடம்பெறவுள்ளன.

இவ்விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்காக விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் அவர்களின் சொந்த முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மேலும் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடவுள்ளோரை அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு பிந்தாது நியமனக் கடிதத்துடனும், தம்மை உறுதிப்படுத்தும் ஆவணத்துடனும் மதிப்பீட்டு நிலையத்திற்கு சமூகமளித்து தமது வரவினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, மதிப்பீட்டுப் பணிகள் தினமும் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (03)

# எமது மக்களின் வாழ்வாதாரத்தை இயற்கை அனர்த்தமும் சிதைத்தது

## சந்திரகுமார் எம்.பி. கவலை

(கிளிநொச்சி)

கடந்த கால யுத்தப் பாதிப்பிலிருந்து முற்றாக மீளமுன்னர் தற்போது ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தம் எம்மக்களின் வாழ்வியலை மீளவும் ஒருபடி பின் தள்ளியுள்ளது, என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதற் கட்ட நிவாரணப் பொருட்களை வழங்கி வைத்தபின் மக்களுடன் கலந்துரையாடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த சில நாட்களாக பெய்து வந்த கடும் மழை யினால் மக்கள் மிகுந்த பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர் இதன் காரணமாக மக்கள் மீளவும் முகாம வாழ்க்கையை எதிர் கொள்ள நேர்ந்ததையிட்டு நாம் மிகுந்த மன வேதனையடைகின்றோம். அதேவேளை ஏற்பட்ட பாதிப்புக்களிலிருந்து அவர்களை மீட்பதற்காக நாம் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளோம்.

அதன் ஒரு கட்டமாக முதற் கட்ட நிவாரணப் பொருட்களை வழங்கியுள்ளோம் இதன் தொடர்ச்சியாக அடுத்த வாரமும் உலருணவுப் பொட்களை வழங்குவதற்கு நாம் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளோம். அத்தோடு இவ்வாறான சம்பவங்கள் எம்மக்களுக்கு அதிகளவு பாதிப்பினை ஏற்படுத்துகின்றமை தொடர்பாகவும் நாம் ஆராய்ந்து வருகின்றோம்.

மேலும் யுத்தப் பாதிப்பிலிருந்து முழுமையாக மீளமுன்னர் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் படிப்படியாக முன்னேற்றம் கண்டு வந்த எம்மக்களின் வாழ்வாதார அபிவிருத்தியை ஒரு படி பின் தள்ளியுள்ளது. எனவே வழங்கப்பட்டுவரும் உதவித்திட்டங்களை இப்பாதிப்பிலிருந்து மக்கள் மீளும் வரை தொடர வேண்டிய பொறுப்பை நிறுவனங்களும் ஏனையோரும் ஏற்கவேண்டும்.

இயல்பான தரைத்தோற்றத்திற்கு மாறாக அமைக்கப்பட்ட வடிகால் அமைப்புக்களை, சீர்படுத்துவதற்கான திட்டத்தினை தொடரும் துரித அபிவிருத்தித் திட்டத்தினூடாக மேற்கொள்வதற்கும், அத்தோடு மக்களுக்கு மிக விரைவாக நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கும் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

வெள்ளத்தினால் பாதிக் கப்பட்டிருந்த மக்களுக்கான உடனடித் தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு முதற்கட்டமாக ஒரு வார காலத்திற்கு தேவையான உலருணவு வழங்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுடன் இணைந்து நடவடிக்கையினை மேற்கொண்டு இவ் உலருண்வுப் பொதிகளை வழங்கி வைத்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலக பிரிவுகளிலும் நேற்று முன்தினம் இவ் உலருணவு வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.



# தேசிய இளைஞர் விருது விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 34ஆவது தேசிய இளைஞர் விருது விழா மஹரகமவில் இன்று இடம்பெறவுள்ளது.

இதில் தேசிய இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, பிரதி அமைச்சர் துமிந்த திசாநாயக்க மற்றும் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவர் சட்டத் தரணி லலீத் பியூம் பெரேரா ஆகியோர் தலைமையில் மேற்படி விருது வழங்கும் விழா நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(எப்.எஸ்)

# காரை மத்தி மேம்பாட்டுக் கழகத்தின் பொதுக்கூட்டமும் கௌரவிப்பு விழாவும்



(காரைநகர்)

காரைநகர் பிரதேசத்தில் உள்ள காரை மத்தி மேம்பாட்டுக் கழகத்தின் 6ஆவது ஆண்டு பொதுக் கூட்டமும் பரிசளிப்பு மற்றும் கௌரவிப்பு நிகழ்வு கடந்த சனிக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் இ.த. ஜெயசீலன் பிரதம விருந்தினராகவும், யாழ்ரன் கல்லூரி அதிபர் வே. முருகமூர்த்தி, காரைநகர் தபால் அதிபர் சி. குமாரவேல், காரைநகர் வடக்கு ஜே/47 கிராம அலுவலர் இ. திருப்புகழூர்சிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் காரைநகர் மத்திய பகுதிக்கு உட்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த நான்கு மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் பணம் வைப்பிலிடப்பட்டு வங்கிச் சேமிப்புப் புத்தகங்கள் மற்றும் பரிசுப் பொதிகளை பிரதம விருந்தினர் வழங்கிக் கௌரவித்தார். (50)

# பாடசாலை அதிபர்களுக்கு மடிக் கணினிகள் வழங்கல்

(அச்சுவேலி)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட சில பாடசாலைகளின் அதிபர்களுக்கு மடிக் கணினிகள் வழங்கப் பட்டுள்ளன. இவ்வருடம் வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட கணினித் தகவல் தொழில்நுட்பப் போட்டியில் வெற்றியீட்டிப் பாடசாலை அதிபர்களுக்கே இவ்வாறு முதற்கட்டமாக மடிக்கணினிகள் வழங்கப்பட்டன.

இத்திட்டத்தை விரிவுபடுத்தும் வகையில் ஏனைய பாடசாலைகளின் அதிபர்களுக்கும் எதிர்காலத்தில் மடிக் கணினிகள் வழங்கப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் மேற்படி போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகளுக்கு மல்ரி மீடியா புறஜெக்ரர் மற்றும் டிஜிற்றல் கமரா போன்றவையும் பாடசாலைத் தேவைகளுக்காக வழங்கப்பட்டன. (03)

# நிர்வாக சேவை தரம் III இற்கு நியமனம் பெறுவோர்

(அரியாலை)

இலங்கை நிர்வாக சேவை தரம் மூன்றிற்கு ஆட்களைச் சேர்ப்பதற்காக நடத்தப்பட்ட 2010ஆம் (2011) ஆண்டு திறந்த போட்டிப் பரீட்சை மற்றும் 2009 (2010) ஆண்டு நடத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளில் சித்தியடைந்து நாடு தழுவிய ரீதியில் நியமனம் பெறவுள்ளவர்களின் பெயர் விபரங்கள் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ளது.

இவர்களுள் தமிழ் மொழி மூலம் தோற்றிய வடமாகாணப் பரீட்சார்த்திகளுள் பின்வருபவர்களும் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 2ஆம் திகதியில் இருந்து நியமிக்கப்படுவதற்கான அனுமதியை இலங்கை பொதுச் சேவை ஆணைக்குழு வழங்கியுள்ளது.

நியமனம் பெறுவோர் வருமாறு:

திறந்த போட்டிப் பரீட்சையில் இருந்து தெரிவானோர், செல்வி பி. நிவேதிகா (இல: 24, திருமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்), ஐ. பிரதாபன் இல: 84, சிறிநகர், பூந்தோட்டம், வவுனியா), ரி. பிருந்தாகரன் (பிளாக் றோட், சங்கானை, யாழ்ப்பாணம்), ஆர். குருபரன் (இல: 32, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்), வி. சூரியகுலன் (இல: 15, பிள்ளையார் கோவிலடி, குருமன்காடு, வவுனியா)

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் இருந்து தெரிவானோர், செல்வி என். செல்வகுமாரி (பிரதேச மேலாளர், தபால் திணைக்களம் யாழ்ப்பாணம்), சி. யக்சீல் (பிரதேச சபை, சாவகச்சேரி, யாழ்ப்பாணம்), எஸ். சிவசுந்தரம் (பிரதேச ஆணை யாளர் அலுவலம்) (23)

# நெல்சிப் செயற்திட்ட கையேடு ஆளுநரால் வெளியிடப்பட்டது



(யாழ்ப்பாணம்)

நெல்சிப் செயற்திட்டத்தின் செய்தி ஏடும் கையேடும் கடந்த 22ஆம் திகதி வட மாகாண ஆளுநர் ஜி. ஏ.சந்திரசிறியினால் யாழ்ப் பாணத்திலுள்ள ஆளுநர் உப அலுவலகத்தில் வைத்து வெளியிடப் பட்டது. உள்ளூராட்சி சபைகளில் பொது மக்களின் பங்களிப்பு, உள்ளூராட்சிச் சபைகளின் சேவைகள் தொடர்பான கையேடும், நெல்சிப் செயற்திட்டத்தினால் மன்னார் மாவட்டத்தில் மேற்கொள் ளப்பட்ட களஆய்வு தொடர்பான செய்தியேடும் ஆளுநரினால் வெளியிடப்பட்டது. வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ர.விஜயலட்சுமி, வட மாகாண உள்ளூராட்சித் திணைக்கள ஆணை யாளரும் நெல்சிப் திட்டப் பணிப்பாளருமான .எம்.ஜேகு மற்றும் உள்ளூராட்சித் திணைக்கள உயர் அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

# அனர்த்தங்களிலிருந்து மக்களைக் காக்க நவீன செயற்திட்டங்கள் அவசியமானது

## யாழ்.அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

தீ, வெள்ளப் பெருக்கு, சூறாவளி போன்ற அனர்த்தங்களின்போது மக்களை அவற்றில் இருந்து பாதுகாப்பதற்கு நவீன செயற்திட்டங்களின் அவசியம் குறித்து யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் வலியுறுத்தியுள்ளார்.

தேசிய பாதுகாப்பு தினமான நேற்றுமுன்தினம் யாழ். செயலகத்தில் யாழ்.செயலக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

எமது தேசத்தில் 33 ஆயிரம் பொதுமக்களைக் கொன்றொழித்த சுனாமி, நிஷாப் புயல், வெள்ளம், தீ போன்ற அனர்த்தங்களைக் கட்டுப்படுத்த அனர்த்த முகாமைத்துவக் குழுக்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. முன்னெச்சரிக்கை கிடைக்கும் பட்சத்தில் மாவட்டம் முழுவதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அனர்த்தம் ஒன்று ஏற்படும் பட்சத்தில் தியாகம் செய்து உழைக்க எல்லோரும் தயாராக இருக்க வேண்டும் என்று அரச அதிபர் கேட்டுக் கொண்டார்.

கடந்த 2004 ஆம் ஆண்டு சுனாமித் தாக்கத்தின் போது நாடு பூராகவும் பல்லாயிரக் கணக்கான மக்கள் காவு கொள்ளப்பட்டிருந்தனர்.

இவ்வாறு யாழ், முல்லைத்தீவு மாவட்டங்களிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்த போதும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்டிருந்த பாதிப்புக்கள் குறித்த ஆவணங்கள் யுத்த கால நடவடிக்கை காரணமாக அழிவடைந்து போயிருப்பதாகவும் கவலை வெளியிட்டார்.

யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எஸ்.ரவி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் இரு நிமிடம் இயற்கை அனர்த்தத்தின் போது காவு கொள்ளப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. அத்துடன் சுனாமி, சூறாவளி, டெங்கு போன்ற இயற்கை அனர்த்தங்கள் குறித்து ஒளிப்படத் தொகுப்பும் காண்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் யாழ்.செயலக அதிகாரிகள், ஊழியர்கள் கலந்து கொண்டனர். (பா, 120)



எழுவைதீவு வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் வைத்தியர் சண்முகரத்தினம் அவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தவிசாளரும், ஈ.பி.டி.பி.யின் ஊர்காவற்றுறைப் பிரதேச அமைப்பாளருமான ஜெயகாந்தன் உரையாற்றுவதையும், அருகில் வைத்தியர், உத்தியோகத்தர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம். (85)

# இரண்டு நூல்களின் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸின் 72 ஆவது அகவை நிறைவையொட்டி கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய, இலங்கைத் தமிழியல் - சில பதிவுகள், "நாலும், இரண்டும் சொல்லுக்கு உறுதி" என்ற நூல்களின் வெளியீட்டு விழா எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும் ஆசியுரையை நல்லை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம் பந்த பரமாசாரிய சுவாமிகளும் வாழ்த்துரைகளை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அதிபர் வேல். சிவானந்தன் ஆகியோரும் வழங்குவர்.

வெளியீட்டுரைகளை திருகோணமலை கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி சி.சிவநிர்த்தானந்தா (எஸ்.எஸ்.ஆனந்தன்), சொல்லின் செலவர் இரா.செல்வவடிவேல் ஆகியோரும் நயப்புரைகளை சரவணை நாகேஸ்வரி வித்தியாலய ஆசிரியர் கு.பாலசண்முகன், கொக்குவில், இந்துக் கல்லூரி ஆசிரியர் எஸ்.சந்திரசேகர் ஆகியோரும் வழங்குவர்.

நூல்களின் ஆசிரியர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஏற்புரையையும் நன்றியுரையையும் வழங்குவார். (10)


# வலிகாமம் கிழக்குப் பகுதியில் மரக்கறிச் செய்கை பாதிப்பு

(அச்சுவேலி)

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலும் கடந்த சில தினங்களாகப் பெய்த மழை காரணமாக விவசாயிகள் பெரும் கஷ்ரங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

வலிகாமம் கிழக்கின் பல பிரதேசங்களிலும் நெல் வயல்களில் மழை வெள்ளம் அளவுக்கதிகமாகத் தேங்கி நிற்பதனால் அவற்றைப் பெரும் சிரமத்துக்கு மத்தியில் வெளியேற்றும் முயற்சிகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றமையினை பரவலாகக் காணக்கூடியதாக உள்ளது.

மேலும் அச்சுவேலி, ஆவரங்கால் பிரதேசங்களில் தாழ்நிலப் பகுதிகளில் மரக்கறிப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் மழை வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். பயிர்ச் செய்கை நிலத்தில் நீர் வெளியேற முடியாதளவிற்கு தேங்கி நிற்பதால் பயிர்கள் அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (03)




மனித நேயம் என்றால் என்ன? என்றைக்கோ இங்கே இருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவ்வார்த்தையே தோன்றி இருக்காதல்லவா?

இன்றைய மனித சமுதாயத்தில் அதனை வலை போட்டுத்தான் பிடிக்க வேண்டும். தேட வேண்டிக் கிடக்கு. மனிதனை மனிதன் நேசிக்க வேண்டுமென அனைத்து மதங்களும் போதித்துள்ளன. போதித்தும் வருகின்றன.

கத்தோலிக்க தேவாலயங்களில் திருப்பலிப் பூசைகளின் போது இயேசுக் கிறிஸ்து போதித்த வார்த்தைகளைக் குருவானவர் தெரிவிப்பார்.

அயலானை நேசி. ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு. இவ்விதமாக குருவானவர் கூறியதும் பக்கத்தில் இருக்கும் விசுவாசியை நோக்கி தெரிவிப்பதையும் காண்கிறோம்.

அந்த நிலைமை அவ்விடத்திலன்றி அங்கிருந்து சென்றுவிட்டால் எம்மையும் விட்டுச் சென்று விடுவதையே அனுபவித்து வந்துள்ளோம். பொதுவாக நாங்கள் சுகத்தை அனுபவித்துக் கொண்டு ஏனையோருக்கு கஷ்டத்தை ஏற்படுத்தும் விதமாகவே நடந்து கொள்கிறோமல்லவா?

உதாரணத்துக்கு எமது வீட்டு வேலிகளில் மரங்களை வளர்ப்போம், அதனால் பெறக்கூடிய நிழல், சீதளக் காற்று என்பதை அனுபவிப்பதற்காக! அது வளர்ந்து கிளை பரப்பி மழை காலங்களில் பருத்து கொப்புகள் முறிந்து வீழ்ந்தால் எமது வளவுகளிலா வெட்டிப் போடுகிறோம்?

வீதியோரம் போக்குவரவுக்கு இடைஞ்சலாக அந்தக் கொப்பை இழுத்துச் சென்று போட்டுவிடுவோம். வீட்டு வளவுகளில் காய்க்கும் வாழைக் குலைகளை வெட்டி எடுத்துக் கொண்டு இலை, தண்டுகளை வீதியோரங்களில் போட்டு மற்றவர்கள் அதனால் வருகின்ற கஷ்டங்களை அனுபவிக்க ஆளாகிறோம்.

ஊருக்குள் சனசமூக நிலையங்கள் மற்றும் கிராம அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடாமல் மற்றவர்கள் அதனைச் செய்து குடுத்தால் பிற்பாடு அதனில் முழுமையான நலன்களை அனுபவிப்பது இத் தகையவர்கள் தான்.

வீதிகள் பாவனைக்கு உதவாமல் சேதமடைந்து குன்றும் குழியுமாக இருக்கும். அதனை எடுத்துச் சென்று தெரிவிக்க வேண்டியவர்களுக்கு நூறுதரம் அலைந்து புனரமைத்து விட்டால்....

நாங்கள் வீட்டு வளவுக்குள் மழை, வெள்ளம் தேங்குவதை அகற்ற அந்த வீதியைப் பிளந்து வெள்ள நீரை வெளியேற்றத் துணிவர். உடைந்த வீதிகளை போட்டுக் குடுப்பினமா? வீதிகளை அலங்கரிக்க வாழைகள், தோரணங்கள் எங்கெல்லாமோ சென்று வாகனங்களில் கூட எடுத்து வந்து செய்து போடுவார்கள்.

அந்த நிகழ்வு முடிந்து விட்டால் குப்பை கூழங்களாகும். அவற்றை குப்பை லொறி வந்துதான் எடுக்க வேண்டும். "தனக்குத் தனக்கெண்டால் சுளகு படக்கு படக்கு-மெண்டு" அறியாமலா சொன்னாங்கள் பின்ன....

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(28.12.2011 - புதன்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
**கர வருஷம்**
**மார்கழி 12 ஆம் நாள்.**
இராகுகாலம் 12.28-01.58, சுபநேரம் 04.58 -6.28,
நட்சத்திரம்: திருவோணம் மு.ப. 8.41 வரை
திதி: சதுர்த்தி மு.இ. 9-45 வரை
சதுர்த்தி விரத நன்னாள்

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:-** பணம் வரும், குடும்பத்தில் குதூகலம், ஞாபக மறதி, தேகசுகம், மேலோர் அதிகாரம்.

**ரிஷபம்:-** குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், தேகம் பலவீனம், அதிகாரிகள் கவலை, வீண்சினம்.

**மிதுனம் :-** பணம் வரும், குடும்பத்தில் குதூகலம், அயல் வீடு தொல்லை, இனசன அழைப்பு, தேகசுகம்.

**கடகம்:-** குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், தேக பலவீனம், இனசன அழைப்பு, மேலோர் அதிகாரம்.

**சிம்மம்:-** பணம்வரும், குடும்பத்தில் குழப்பம், திடீர் அதிர்ஷ்டம், நண்பர் விரோதம், தேகம் சுகம்.

**கன்னி :-** தொழிலில் ஆதாயம், காசுக் கஷ்டம், நண்பர் உதவி, தூரத்திலிருந்து நற்செய்தி, தேகம் பலவீனம்.

**துலாம் :-** பணம் வரும், குடும்பத்தல் குதூகலம், நண்பர் உதவி, தொழிலில் குழப்பம், மேலதிகாரி சீற்றம்.

**விருச்சிகம்:-** குடும்பத்தில் கவலை, காசுக்கஷ்டம், வெளிநாட்டிலிருந்து நற்செய்தி, தேகம் பலவீனம்.

**தனுசு:-** பணம்வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, அயல்வீடு பகை, தெரு விபத்து வரலாம், தேகம் சுகம்.

**மகரம்:-** குடும்பத்தில் கவலை, காசுக்கஷ்டம், திடீர் பயணம், தெய்வீக நாட்டம், தேகம் பலம்.

**கும்பம் :-** பணம்வரும், குடும்பத்தில் குதூகலம், அயல் வீடு தொல்லை, மனம் அலை பாய்தல், தேகம் பலவீனம்.

**மனம்:-** குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், தெரு விபத்து வரக்கூடும், நண்பர் வருகை, தேகம்சுகம்.

# புனரமைக்கப்பட்ட வீதிகள் மீண்டும் சேதமடைவதாக விசனம்

(அச்சுவேலி)

திருத்த வேலை என்ற பெயரில் செப்பனிடப்படும் குடாநாட்டு வீதிகள் பலவற்றில் பயணம் செய்வதில் பொதுமக்களும் வாகனச் சாரதிகளும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

குறிப்பாக யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் காணப்படும் வேம்படி வீதி மற்றும் ஆனைப்பந்தி சந்திப் பகுதிகளில் வீதிகளில் காணப்படும் குழிகளுக்குத் திருத்தவேலை என்ற பெயரில் தார்க் கலவை இடப்படுகிறது.

இவ்வாறு இடப்படும் கலவைகள் சீரின்றியும் மட்டமின்றியும் காணப்படுவதால், அவ்வீதிகளினூடாகப் பயணம் செய்வதில் மக்களும், வாகனச் சாரதிகளும் இடர்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இதேவேளை, புத்தூர்-சுன்னாகம் வீதியும் இவ்வாறே செப்பனிடப்பட்டுள்ளது. அவ்வீதியூடாகச் செல்லும் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (03)

# தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள் விழாவிற்கு நிதியுதவி

(அச்சுவேலி)

எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு தரம் ஒன்றில் சேர்த்துக் கொள்ளவுள்ள மாணவர்களை பாடசாலைகளில் இணைத்து வரவேற்கும் முகமாக நடத்தப்படவுள்ள கால்கோள் விழாவுக்கெனத் தெரிவு செய்யப்பட்ட குறிப்பிட்ட சில பாடசாலைகளுக்கு அதற்கான செலவீனத்தை ஈடுசெய்யும் வகையில் கல்வி அலுவலகத்தினால் நிதியுதவிகள் வழங்கப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் பிள்ளை நேயப் பாடசாலை செயற்றிட்டத்திற்குள் உள்ளடக்கப்படாத வறிய பிரதேசப் பாடசாலைகளுக்கே இவ்வாறான நிதியுதவிகள் யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தினால் தெரிவு செய்யப்பட்ட சில பாடசாலைகளுக்கு மாணவர்களின் நலன் கருதி வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. (03)


# அழகியற் கல்வியை மேம்படுத்த அரசு கவனம் செலுத்துகின்றது

## கல்வியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

மாணவர்களின் அழகியற் கல்வியை மேம்படுத்தி பலநாடுகளும் விரும்பும் வண்ணம் அழகியற் திறன்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளுக்கு கீழைத்தேய இசைக் கருவிகளை வழங்குவதற்காக கடந்த 14ஆம் திகதி கல்வி அமைச்சு வளாகத்தில் இடம் பெற்ற விழாவில் கலந்து கொண்டு பேசும் போது அமைச்சர் இவ்வாறு கூறினார். இந்த விழாவின் போது ரூபா எண்பத்தைந்து இலட்சம் பெறுமதி உள்ள அழகியற் கல்விக் கருவிகள் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன. இங்கு முதற் கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட 50 பாடசாலைகள் ஒவ்வொன்றுக்கும் 175,000 ரூபா பெறுமதியான கருவிகள் வழங்கப்பட்டன.



அழகியற் துறையினை மேம்படுத்துவதற்கு அரசு சிறப்பான கவனம் செலுத்தி வருகின்றது. கடந்த காலத்தில் அதிகமாக அழகியற் கல்வி ஆசிரியர்களை நியமித்தது ஆக்கத் திறனை மேம்படுத்துவதற்கேயாகும்.

இதன் ஊடாக வருங்காலத்தில் தேசிய மட்டத்தில் காணப்படுவது போல் பன்னாட்டிலும் திறமையை வெளிப்படுத்தும் திறமைகளுள்ள அழகியற் குழுவாக நமது பிள்ளைகளை உருவாக்குவதற்குத் தான் எண்ணியிருப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## வடமேற்கு திசை நோக்கி நகர்கிறது சூறாவளி

(கொழும்பு)

வங்காள விரிகுடாவில் தோன்றியிருந்த சூறாவளி வடமேற்குத் திசையை நோக்கி தொடர்ந்தும் நகர்ந்துகொண்டிருப்பதாக வளிமண்டளவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில் மன்னார் தொடக்கம் யாழ்ப்பாணம், திருகோணமலை ஊடாக மட்டக்களப்பு வரையான ஆழ் கடல் பகுதிகள் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனால் மீனவர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற் பட வேண்டியது அவசியம் என வளிமண்டளவியல் திணைக்களத்தின் வானிலை அதிகாரி கே.சூரியகுமாரன் தெரிவித்தார்

## எதிர்பார்த்த பெறுபேறு இல்லை மாணவி தற்கொலைக்கு முயற்சி

(கொழும்பு)

வெளியாகிய கல்விப் பொதுத் தாரதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில் தான் எதிர்பார்த்த முடிவு கிடையாதமை காரணமாக ஏமாற்றமடைந்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட மாணவி ஒருவர் ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிரான்குளம் பகுதியைச் சேர்ந்த மாணவி ஒருவரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த மாணவி பாடசாலையில் திறமையானவர் எனவும் குறித்த மாணவியின் பரீட்சை முடிவுகள் எதிர்பார்க்கப்பட்டதை விட மிக மோசமான நிலையில் வெளிவந்ததன் காரணமாக இந்நிலையேற்பட்டதாக கவலை தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கு பரீட்சைப் பெறுபேற்றில் ஏற்பட்டுள்ள குளறுபடியும் காரணமாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## வீதி நிர்மாணிப்புத் திட்டத்தால் சிங்கராஜ வனத்திற்கு பாதிப்பில்லை

### யுனெஸ்கோவிடம் அறிக்கை கையளிப்பு

(கொழும்பு)

வீதி நிர்மாணிப்புத் திட்டத்தால் சிங்கராஜ வனத்திற்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் அறிக்கை யுனெஸ்கோ அமைப்பிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

யுனஸ்கோ அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி கலாநிதி தயான் ஜயதிலகவின் ஊடாக இந்த அறிக்கை ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சுற்றாடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எஸ்.எச்.சமரதுங்க தெரிவித்தார்.

சிங்கராஜ வனத்திற்குள் வீதியொன்றை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளமை தொடர்பில் அறிந்துகொண்ட பின்னர் சுற்றாடல் அமைச்சினால் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது.

குறித்த வீதியை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதால் சிங்கராஜ வனத்திற்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படவில்லை என்பது அமைச்சு மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எவ்வாறயினும் இந்த வீதியின் நிர்மாணப் பணிகள் சுற்றாடல் அமைச்சரின் தலையீட்டினால் தற்போது நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தெற்கு அதிவேக வீதியில் பஸ் சேவை நடத்த அனுமதி

(கொழும்பு)

அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் தெற்கு அதிவேக வீதியில் பயணிகள் போக்குவரத்து பஸ் சேவையை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முதற்கட்டத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் இரண்டு பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளர் ஆர்.டபிள்யூ. ஆர்.பிரேமசிறி தெரிவித்தார்.

இதற்கமைய கொட்டாவையில் இருந்து பின்னதுவ வரை இந்த பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

எதிர்காலத்தில் தனியார் பஸ்களுக்கும் தெற்கு அதிவேக வீதியைப் பயன்படுத்துவதற்கான அனுமதியை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.



இதேவேளை, நத்தார் தினத்தில் தெற்கு அதிவேக வீதியைப் பயன்படுத்திய வாகனங்களின் எண்ணிக்கை வெகுவாக உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நத்தார் தினத்தில் மாத்திரம் 12 ஆயிரம் வாகனங்கள் அதிவேக வீதியைப் பயன்படுத்தியுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

இதனூடாக 24 இலட்சம் ரூபா வருமானம் ஈட்டப்பட்டதாகவும் அவர் கூறினார்.

தெற்கு அதிவேக வீதி திறக்கப்பட்ட நாள் முதல் இதுவரையான காலப்பகுதிக்குள் இரண்டு இலட்சம் வாகனங்கள் இந்த வீதியினூடாகப் பயணித்துள்ளதாக துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு தெரிவித்தது. இந்த வீதியூடாக இதுவரையில் ஏழு கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட வருமானம் கிடைத்துள்ளதாக அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார்

## தேவைக்கேற்ப மின் உற்பத்தி நுரைச்சோலையில் இல்லை

### அரசுக்குப் பெரும் பொருளாதார இழப்பு

(கொழும்பு)

சீனாவின் உதவியில் கட்டப்பட்ட நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் தேவைக் கேற்ப மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாததால், அரசுக்குப் பெரும் இழப்புகள் ஏற்பட்டுள்ளதாக மின்சாரசபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

300 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட நுரைச்சோலை அனல் மின்நிலையம் முழுமையாக இயங்கினால் நாளொன்றுக்கு ஆறு மில்லியன் அலகுகளுக்கும் அதிகமான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும்.

ஆனால் 2011 ஆம் ஆண்டின் பெரும்பாலான காலத்தில் இந்த மின்நிலையம் பாதியளவிலேயே இயங்கியுள்ளது.

இதனால் அரசுக்கு மில்லியன் கணக்கிலான இழப்புகள் ஏற்பட்டுள்ளன.இந்த ஆண்டில் பல்வேறு தொழில் நுட்பக் கோளாறுகளினால், இந்த மின் நிலையம் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த மின் நிலையம் செயற்படாமல் போகும் ஒவ்வொரு நாளிலும் 80 மில்லியன் ரூபா இழப்பை அரசாங்கம் சந்தித்து வருகிறது.

கடந்த மார்ச் மாதம் திறந்து வைக்கப்பட்ட பின்னர் பல்வேறு காரணங்களால், 35 நாட்கள் நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் மின்உற்பத்தி இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் பாரிய இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் மின் சார சபை அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

## இரணைமடு உட்பட நாடு முழுவதும் 56 விமான நிலையங்கள் அமைப்பு

(கொழும்பு)

உள்நாட்டு வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் நன்மை கருதி உள்நாட்டில் மேலும் பல விமான நிலையங்களை நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன்பொருட்டு நாடு முழுவதும் புதிதாக 56 விமான நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதுடன் கண்டியில் மார்ச் மாதம் விமான நிலையமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்காக கண்டியில் 4 இடங்கள் அவதானிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான கள ஆய்வுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தெரிவித்தார்.

இரணைமடு மற்றும் நுவரெலியாவிலும் விமான நிலையங்கள் நிர்மாணிக்கும் பணிகள் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படும். 750 மில்லியன் ரூபா இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் முதல் 4 மாதங்களில் இலங்கைக்கு 24 ஆயிரம் விமானங்கள் வருகை தந்துள்ளன. இவ்வருடம் முதற் காலாண்டில் இத்தொகை 32 ஆயிரத்து 26 ஆக அதிகரித்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### உரிய தரமின்றிச் செயற்பட்ட

## எரிபொருள் நிலையங்களின் 12 உரிமையாளர்களுக்கு அபராதம்

(கொழும்பு)

உரிய தரம் மற்றும் பெறுமதிக்கு அமைய, எரிபொருட்களை விநியோகிக்காத எரிபொருள் நிரப்பு நிலையங்களின் 12 உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்களிடம் இருந்து 24 மில்லியன் ரூபா அபராதம் அறவிடப்பட்டுள்ளதாக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

உரிய தரம் மற்றும் பெறுமதிக்கு அமைய, எரிபொருள் நிரப்பு நிலையங்களில், எரிபொருள் நிரப்பப்படுகின்றதா என்பது தொடர்பில் கண்டறிவதற்கு விசேட குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இந்தக் குழுக்களால் பிபில, கரலியத்த, மதுரங்குளி, நுரைச்சோலை, புத்தளம், நிக்கவரெட்டிய, கற்பிட்டி, அம்பிலிப்பிட்டி மற்றும் ஹபராதுவ ஆகிய பகுதிகளில் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப் பட்டன. குறித்த எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அறவிடப்பட்ட அபராதத் தொகை பணமுறியாகக் கருதப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் உரிய தரத்திற்கமைய எரிபொருளை விநியோகிப்பதற்கு இந்த எரிபொருள் நிலையங்களுக்கு ஒரு வருடகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதியில் உரிய தரத்திற்கமைய எரிபொருட்களை விநியோகிக்காத பட்சத்தில் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையங்களின் அபராதப் பணம் மீள வழங்கப்படாதெனவும், எரிபொருள் நிரப்பு நிலையங்களின் அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

# அவுஸ்ரேலியாவுடனான முதல் டெஸ்ட் இந்திய அணிக்கு சிறப்பான அடித்தளம்


(மெல்பேர்ன்)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில், சேவாக், சச்சின், ராவிட் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி ஸ்திரமான ஆரம்பத்தைப் பெற்றுள்ளது.

இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி மெல்பேர்ன் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

ஆறு விக்கெட்டுக்களை இழந்து 277 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தை அவுஸ்ரேலிய அணி சகீர்கானின் பந்து வீச்சு ஈடுகொடுக்க முடியாது விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் அவுஸ்ரேலிய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 333 ஓட்டங்களை முதல் இனிங்ஸிற்காகப் பெற்றுக் கொண்டது. இதில் பொண்டிங் 62, கோவன் 68, பீற்றர் சிடில் 41 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சகீர்கான் நான்கு, உமேஷ் யாதேவ், அஸ்வின் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இந்திய அணி, 22 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் முதலாவது விக்கெட்டை இழந்தது. இந்நிலையில் ஜோடி சேர்ந்த ராவிட், சேவாக் இணை அணியை சிறப்பான நிலைக்குக் கொண்டு சென்றது. இருப்பினும் 97 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இந்திய அணியின் இரண்டாவது விக்கெட்டும் வீழ்த்தப்பட்டது. இந்நிலையில் ராவிட், சச்சின் ஜோடி அணியின் நிலையை உணர்ந்து பொறுப்புடன் ஆடினர். மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 117 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப்



பெற்றபோது மூன்றாவது விக்கெட்டும் வீழ்த்தப்பட்டது. இறுதியில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டவேளை இந்திய அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து 214 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் சச்சின் டெண்டுல்கர் 73, சேவாக் 67 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது ராவிட் 68 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர். பந்து வீச்சில் பட்டின்சன், பீற்றர் சிடில் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.




## கால்பந்து வீரர் ஓய்வு

(புதுடில்லி)

இந்திய கால்பந்து அணி வீரர் மகேஷ் காவ்லி, சர்வதேச கால்பந்துப் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக நேற்று முன்தினம் அறிவித்தார்.

31 வயதான காவ்லி இந்திய அணிக்காக இதுவரை 82 போட்டிகளில் பங்கேற்று இருக்கிறார். போதுமான அளவுக்கு சர்வதேசப் போட்டிகளில் விளையாடி விட்டதாக நினைக்கிறேன். எனது குடும்பத்தினருடன் ஆலோசித்த பிறகு இந்த முடிவுக்கு வந்தேன்" என்று குறிப்பிட்டார். 12 ஆண்டுகளாக இந்திய அணிககாக விளையாடிய அவர் இனி உள்ளூரில் நடக்கும் கிளப் போட்டிகளில் (டெம்போ அணிக்காக) மட்டும் கவனம் செலுத்த இருப்பதாகக் கூறியிருக்கிறார்.

## 8 வருடங்களின் பின்னர் ஐ.பி.எல்.இல் மக்கில்



கடந்த 8 வருடங்களாக இருபது -20 கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஒதுங்கியிருந்த ஸ்டுவர்ட் மக்கில், இந்திய பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) போட்டிகளின் ஊடாக மீண்டும் இருபது -20 இல் கலந்து கொள்ளவுள்ளார்.

2003ஆம் ஆண்டு நொட்டிங்ஹாம் ஹெயர் அணிக்காக கடைசியாக ருவென்ரி 20 போட்டியில் விளையாடிய இவர், இவ்வருடம் பிக் பாஷ் லீக்ஸ் போட்டிகளில் கலந்துகொள்கிறார். ஐ.பி.எல். போட்டிகளுக்கும் இவருடைய பெயர் பிரேரிக்கப்பட்டுள்ளது.

40 வயதுடைய இவர் இருபது -20 போட்டிகளில் அதிரடி வீரராகச் சிறந்து விளங்குபவர்.

இந்த நிலையில் இந்திய ஐ.பி.எல். போட்டிகளுக்கு இவருடைய பெயர் பிரேரிக்கப்பட்டுள்ளது.

என்னால் தொடர்ந்தும் சிறப்பாகச் செயற்பட முடியும் என்பதை எனது பிள்ளைகளுக்கு வெளிக்காட்டுவதற்கே நான் பிக் பாஷ் லீக்ஸ் போட்டிகளில் கலந்து கொண்டேன், எனக்கு வயது போவதாக அவர்கள் கருதுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். பல்வேறு ருவென்ரி -20 போட்டிகளில் நான் பங்கெடுத்துள்ளேன். என்னால் இப்போட்டிகளில் தொடர்ந்தும் பிரகாசிக்க முடியும் என்றும் நான் நம்புகின்றேன் என்றார்.

சிட்னி சிக்ஸர்ஸ் போட்டிகளில் நான் ஆடிய சிறப்பான ஆட்டத்தைத் தொடர்ந்து எனது ஆட்டம் ஐ.பி.எல். போட்டியாளர்களைக் கவர்ந்திருக்கும் என்றும் நம்பிக்கை இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஐந்து பேர் கொண்ட தெரிவுக்குழுவே வேகப்பந்து வீச்சாளர்களைத் தெரியும்

(புதுடில்லி)

இந்திய கிரிக்கெட் அணிக்கு வேகப் பந்துவீச்சாளர்களைத் தேர்ந்தெடுக்கும் செயற்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.


அதற்காக ஐந்து பேர் கொண்ட தெரிவுக்குழுவை நியமித்துள்ளதாக இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணிக்கு திறமையான வேகப்பந்துவீச்சாளர் களைத் தெரிவு செய்வதற்கான குழாமை ஆரம்பிப்பதே புதிய தெரிவுக்குழுவின் பிரதான பொறுப்பாகும்.

குழாம் தெரிவின் போது உள்ளூர் போட்டிகளில் ஆற்றல்களை வெளிப்படுத்திய வீரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இந்திய கிரிக்கெட் அக்கடமியின் முன்னாள் தலைவரும், முன்னாள் வீரருமான அனில் கும்ப்ளே இதற்கு முன்னர் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சித்திருந்தார்.

எனினும் அதற்குப் போதிய ஒத்




துழைப்புக் கிடைக்காததால் அவர் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

கும்ப்ளே விலகிய பின்னராவது இந்தத் திட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டமை மகிழ்ச்சிக்குரியது என இந்திய முன்னாள் வீரர்கள் தெரிவித்துள்ளனர்.

## கால்பந்து மத்தியஸ்தர் முன்னோடி பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)


கால்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சைக்குத் தோற்றவுள்ள யாழ். மாவட்ட பரீட்சார்த்திகளுக்கான முன்னோடிப் பயிற்சி வகுப்பு எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம் பெறவுள்ளதாக யாழ். கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் அஜித்குமார் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் 7ஆம் திகதியளவில் கொழும்பு, யாழ்ப்பாணத்தில் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படவுள்ள கால்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சைக்கு முன்னோடியாக இது இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் பரீட்சை நடைபெறவுள்ளது.

மேலும் இப்பரீட்சைக்குத் தேவையான முன்னோடி பயிற்சிகளை வழங்க கொழும்பிலிருந்து விரிவுரையாளர்கள் வரவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (எப்.எஸ்)

## முதல் 50 இடத்திற்குள் வருவதே இலக்காகும்



(சென்னை)

2012ஆம் ஆண்டில், உலக ரென்னிஸ் தரவரிசையில் முதல் 50 இடத்திற்குள் முன்னேறுவதே இலக்கு என்று இந்திய வீரர் சோம்தேவ் கூறியுள்ளார். சென்னை ஓப்பன் போட்டியில் கடந்த 2009ஆம் ஆண்டை விட இந்தத் தடவை நிச்சயம் சிறப்பாக விளையாடுவேன் என்ற நம்பிக்கை உள்ளது. சென்னையில் விளையாடுவது எனக்கு ரொம்பப் பிடிக்கும். அங்குள்ள சூழ்நிலை, ரசிகர்களின் ஆதரவு பிரமிக்க வைக்கும். ஆனால் இங்கு சாதிப்பது எளிதான விடயம் அல்ல. நீங்கள் நன்றாக விளையாட விரும்பும் போது, ரசிகர்களும் அப்படியே விரும்புவார்கள். எனது முழுக் கவனமும் லண்டன் ஒலிம்பிக்கில் தான் இருக்கிறது. அதே சமயம் எனது ஆட்டத்திறனை மேலும் மேம்படுத்த வேண்டும். ஒலிம்பிக் போட்டியில் ஒற்றையர் பிரிவுக்கு தகுதிபெறவேண்டும் எனவும் தெரிவித்தார்.

## இந்தியா-பாக். மீண்டும் மோதல்




(டாக்கா)

நான்கு நாடுகள் பங்கேற்கும் ஆசிய கிண்ணக் கிரிக்கெட் அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. நீண்ட இடைவெளிக்குப் பின் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகள் பங்கேற்கும் ஆசிய கிண்ணக் கிரிக்கெட் தொடர், வரும் 2012இல் பங்காதேஷில் நடக்கிறது. அனைத்துப் போட்டிகளும் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடக்கும் லீக் போட்டிகள் வரும் மார்ச் 12இல் தொடங்கி 22இல் முடியும்.

நடப்பு சம்பியன் இந்திய அணி முதல் போட்டியில் இலங்கையை (மார்ச் 13) சந்திக்கிறது. பாகிஸ்தானை, மார்ச் 18இல் எதிர்கொள்கிறது. கடந்த உலகக் கிண்ண அரையிறுதிக்குப்பின் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ள போட்டிகள் என்பதால், அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இறுதிப் போட்டி மார்ச் 22இல் நடக்கும்.

## அனுசரணை விலக்கம்

உலக மகளிர் ரென்னிஸ் போட்டிகளுக்கு கடந்த 6 ஆண்டுகளாக அனுசரணை வழங்கிவந்த சொனி எரிக்சன் நிறுவனம் அடுத்த ஆண்டில் தனது அனுசரணையை விலக்கிக் கொள்ளவுள்ளது.

கடந்த 2005 ஆம் ஆண்டு 88 மில்லியன் டொலருக்கு உலக மகளிர் ரென்னிஸ் போட்டிகளுக்கான அனுசரணையை சொனி எரிக்சன் பெற்றது. இந்த ஒப்பந்தக்காலம் 2012 ஆம் ஆண்டுடன் முடிவடையவுள்ளது. இந்நிலையில் இந்த ஒப்பந்தத்தை புதுப்பிக்கப் போவதில்லை என சொனி எரிக்சன் குறிப்பிட்டுள்ளது. சொனி எரிக்சன் நிறுவனத்தின் வியாபார மற்றும் சந்தைப்படுத்தல் திட்டத்தின் கீழ் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக முகாமையாளர கிரேசிய பினெடா தெரிவித்துள்ளார்.

## பெடரேஷன் கிண்ண ரென்னிஸ் தொடர் சானியா தலைமையில் இந்திய அணி

(புதுடில்லி)

பெடரேஷன் கிண்ண ரென்னிஸ் போட்டிக்கான இந்திய அணி, நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சா தலைமையில் களமிறங்குகிறது. ஆசிய ஓசனியா பிரிவு 2இல் இடம் பெற்றுள்ள இந்திய அணி, சீனாவின் ஷென்ஷென் நகரில் நடைபெற உள்ள தொடரில் (ஜனவரி. 30 முதல் பெப்ரவரி 4 வரை) களமிறங்குகிறது. இந்தப் பிரிவில் ஹொங்கொங் (சீனா), ஓமன், இலங்கை, பாகிஸ்தான், துருக்மெனிஸ் தான், ஈரான், பிலிப்பைன்ஸ், கிர்கிஸ்தான், சிங்கப்பூர் அணிகளும் இடம் பெற்றுள்ளன.

இந்த நிலையில், 2012 பெடரேஷன் கிண்ண ஆசிய.்.ஓசனியா 2ஆவது பிரிவு லீக் சுற்றுக்கான இந்திய அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

சானியா மிர்சா கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த சீசனில் விளையாடிய பூஜாஸ்ரீ வெங்கடேஷ், ரு்மி சக்ரவர்த்தி, ஐஸ்வர்யா ஸ்ரீவஸ்தவா ஆகியோர் நீக்கப்பட்டு அவர்களுக்குப் பதிலாக தேசிய சம்பியன் ருதுஜா போன்ஸ்லே, இஷா லகானி, பிரேர்னா பாம்ப்ரி ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# பிரித்தானிய பிரஜை படுகொலை ஐ.தே.கட்சி கடும் கண்டனம்



(கொழும்பு)

தங்காலையில் பிரித்தானிய பிரஜை ஒருவர் படுகொலை செயயப்பட்ட சம்பவத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி கண்டனம் வெளியிட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பக்கச் சார்பற்ற சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் டொக்டர் ஜயலத் ஜயவர்தன கோரியுள்ளார்.

இது தொடர்பில் பாதுகாப்புச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் தலையீடு இன்றி விசாரணை நடத்தப்படும் என பாதுகாப்புச் செயலாளர் கோததபாய ராஜபகஷ உறுதியளித்துள்ளதாக, டொக்டர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

பிரதான சந்தேக நபர் வழமையாகவே ரீ56 ரக துப்பாக்கியுடன் நடமாடுவதைப் பலர் பார்வையிட்டுள்ளனர்.

சட்டவிரோத ஆயுதங்கள் களையப்பட வேண்டுமென உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளமை கவனத்திற் கொள்ளப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பரிந்துரைகளை அரசாங்கம் உதாசீனம் செய்த காரணத்தினால் இவ்வாறான துரதிஷ்டவசமான சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

குறித்த அரசியல் வாதியை பாதுகாக்கும் தரப்பினர், சம்பவத்தில் படுகாயமடைந்த ரஷ்யப் பெண்ணிற்கு அவதூறு ஏற்படும் வகையிலான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக பெருமளவு பணம் செலவிடப்படுவதாகவும், சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## துப்பாக்கி மீட்பு



(கொழும்பு)

தங்காலை ஹோட்டலில் இடம்பெற்ற பிரிட்டன் பிரஜை படுகொலைச் சம்பவத்தின் போது பிரித்தானிய பிரஜை ஒருவரைச் சுட்டுக் கொல்வதற்குப் பயன்படுத்தப்பட்ட ரி-56 ரக துப்பாக்கி நேற்று அதிகாலை மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர் ஒருவரிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது குறிப்பிட்ட துப்பாக்கி தங்காலை, விதாரன் தெனிய வீதியிலுள்ள கைவிடப்பட்ட விஹாரை ஒன்றின் தோட்டத்திலிருந்து மீட்கப்பட்டது.



2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களுக்காக நேற்று முன்தினம் நாடளாவிய ரீதியில் இரண்டு நிமிடநேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த மௌன அஞ்சலியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இணைந்து கொண்டார்

# ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக கடும் தீர்மானம்

## மேற்கு நாடுகள் தீவிர முயற்சி

(கொழும்பு)

ஜெனிவாவில் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான-கடுந்தொனியிலான தீர்மானம் ஒன்றைக் கொண்டு வரும் முயற்சியில் மேற்கு நாடுகள் இறங்கியிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடுமையான சொற்களில் அமைந்த இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ள மேற்கு நாடுகள், இதுகுறித்து முன்னணி ஆசிய நாடுகளுடன் இராஜதந்திர ரீதியிலான ஆலோசனைகளில் ஈடுபட்டுள்ளன.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் காணப்படும் மயக்க நிலை குறித்தும் மேற்கு நாடுகள் இராஜதந்திர ரீதியில் கலந்துரையாடியுள்ளன.

ஜெனிவாவில் மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வரும் முயற்சியில் அனைத்துலக அரசசார்பற்ற நிறுவனங்களும், மேற்கு நாடுகளும் தீவிரமாக ஈடுபட்டுள்ள நிலையில், 2012 ஆம் ஆண்டு இலங்கைக்கு "தீயணைப்பு ஆண்டு" ஆகவே அமையும் என்று கொழும்பிலுள்ள இராஜதந்திரி ஒருவர் கூறியுள்ளார்.

## உயரமான கட்டட நிர்மாணம் அடுத்த மாதம் ஆரம்பமாகும்

(கொழும்பு)

கொழும்பு மாநகரில் நிர்மாணிக்கப்படவுள்ள இலங்கையின் மிகவும் உயரமான கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் அடுத்த மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ளதென தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

350 மீற்றர் உயரம் கொண்ட இந்தக் கட்டத்தை நிர்மாணிப்பது தொடர்பிலான உடன்படிக்கை அடுத்தவாரம் கைச்சாத்திடப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனூஷ பெல்பிட்ட தெரிவித்தார்.

இந்தக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு சுமார் 104 மில்லியன் டொலர் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

# கெய்ன் இந்திய நிறுவனம் துளையிட்ட 3 ஆவது கிணற்றில் எண்ணெய் இல்லை

(கொழும்பு)

மன்னார் கடற்படுக்கையில் கெய்ன் இந்தியா நிறுவனம் தோண்டிய மூன்றாவது எண்ணெய்க் கிணறில் எண்ணெய் வளமோ, இயற்கை வாயுவோ கிடைக்கவில்லை. என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

CLPL-Dorado North 1-82K/1 என்று பெயரிடப்பட்ட இந்த மூன்றாவது கிணற்றைத் துளையிடும் பணிகளில் கெய்ன் இந்திய நிறுவனம் தீவிரமாக ஈடுபட்டு வந்தது.

ஆனால் அந்தக் கிணற்றில் எதுவும் கிடைக்காததால், ஏமாற்றமடைந்த கெய்ன் இந்திய நிறுவனம் கடந்த 14 ஆம் திகதி துளையிடும் பணிகளைக் கைவிட்டுள்ளது.

ஏற்கனவே துளையிடப்பட்ட இரண்டு கிணறுகளிலும் இயற்கை எரிவாயு வளம் இருப்பதாக கெய்ன் இந்திய நிறுவனம் அறிவித்திருந்தது.

அதனால், இரண்டாம் கட்டமாக அவற்றை மேலும் ஆழமாகத் துளையிடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனிடையே கெய்ன் இந்திய நிறுவன்த்துக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் எண்ணெய் வளம் இல்லை என்று உறுதி செய்யப்பட்டுள்ளதானது பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

மன்னார் கடற்படுக்கையில் இலட்சக்கணக்கான பீப்பாய் எண்ணெய் வளம் இருப்பதாக ஆய்வுகளில் தெரியவந்துள்ளதாக அரசாங்கம் முன்னதாக கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆணைக்குழு அறிக்கைக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் முறைப்பாடு



கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல் லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கைக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் முறைப்பாடு செய்யபபட்டுள்ளது.

யுத்தக் குற்றங்கள் தொடர்பாக நல்லிணக்க ஆணைக்குழு வெளியிட்டுள்ள இறுதி அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாதெனத் தெரிவித்தே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்து மேற்படி மனுவைத் தாக்கல் செய்துள்ளன.

மனித உரிமைக் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்தியப் பணிப்பாளர் பிரட் அடம்ஸ் குறித்த மனுவை சர்வதேச நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளார்.

இராணுவத்தினர் யுத்தக் குற்றாவளிகள் அல்ல என கருத்துப்படும் வகையில் நல்லிணக்க ஆணைக் குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாதென பணிப்பாளர் பிரட் அடம்ஸ் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

# பயிர்களைப் பாதுகாக்க சத்தவெடி பிஸ்டல்கள்

(கொழும்பு)

விவசாயிகளுக்கு அவர்களின் பயிர்களையும் கோழிப் பண்ணைகளையும் பாதுகாப்பதற்காக இதுவரை வழங்கப்பட்டு வந்த துப்பாக்கிகளுக்குப் பதிலாக சத்தத்தை மட்டும் ஏறபடுத்தும் பிஸ்டல்களை வழங்க பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுமக்களுக்கு துப்பாக்கிகள் வழங்குவதில் கூடுதலான கட்டுப்பாடுகள் கொண்டு வரப்படுமென்றும் சத்தவெடி பிஸ்டல்களின் விலையைக் குறைக்கும் வகையில் இறக்குமதியாளர்களிடையே போட்டிச்சூழல் ஏற்படுத்தப்படுமென பாதுகாப்பு அமைச்சு அதன் முன்னேற்ற அறிக்கையில் கூறியுள்ளது.

துப்பாக்கிகளுக்கான கட்டளைச் சட்டத்தில் சத்தவெடி பிஸ்டல் ஒரு துப்பாக்கியாக கருதப்படுவதில்லை.

2010 ஆம் ஆண்டு 348 துப்பாக்கிகளும் 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 ஆம் திகதி வரை 222 துப்பாக்கிகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

# விசேட சம்மேளனக் கூட்டத்தில் பலத்தை நிரூபிக்குமாறு சவால்

(கொழும்பு)

ஜே.வி.பியிலிருந்து பிரிந்து சென்ற குழுவினரால் முடியுமானால், திஸ்ஸமஹாராமவில் ஜனவரி முதலாம் திகதி நடைபெறவுள்ள கட்சியின் விசேட சம்மேளனக் கூட்டத்தில் பங்குபற்றி அவர்களின் பலத்தை நிரூபித்துக்காட்டுமாறு அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா அழைப்பு விடுத்துள்ளார்.

ஜே.வி.பியின் மத்திய குழுவில் அங்கம் வகித்த 9 பேர் பிரிந்து சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.


இது குறித்து ரில்வின் சில்வா கூறுகையில், "இக்குழுவினர் தமக்கு பெரும்பான்மையான ஆதரவு உள்ளது என கடந்த சில மாதங்களாக கூறித் திரிகின்றனர்.

அவர்கள் அங்கேயும் இங்கேயும் கத்திக்கொண்டிருக்காமல் இப்போது இக்கூட்டத்திற்கு வந்து தமது பலத்தை நிரூபிக்கலாம்.

இதில் பங்குபற்றுமாறு பிரிந்து சென்ற அனைவருக்கும் அழைபபு விடுக்கிறோம்.

"இவ்விடயத்தில் நாம் முறையான நடைமுறைகளை மேற்கொண்டுள்ளோம். பத்திரிகை விளம்பரங்களையும் பிரசுரித்துள்ளோம்" என அவர் கூறினார்.

எனினும் பிரிந்து சென்ற குழுவின் அங்கத்தவரான ஜி. குலரத்ன இது தொடர்பாக தெரிவிக்கையில், "எமது அங்கததவர்கள் சிலருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது குறிதது நாம் பின்னர் தீர்மானிப்போம்" என்றார்



**கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து சரியான விடை எழுதுக.**

கொழும்பு பாரதி கல்லூரியிலிருந்து பேருந்து வண்டி கண்டியை நோக்கிப் புறப்பட்டது. எம்மில் பலர் இதற்கு முன்பு கண்டிக்குச் சென்றதே இல்லை. மலைகள், மகாவலிகங்கை, பேராதனைப் பூங்கா, பல்கலைக்கழகம், தலதாமாளிகை, தேயிலைத் தோட்டங்கள் பலவற்றைப் பார்வையிடும் எண்ணம் எம்மனதில் அலைமோதின.

40. எங்கிருந்து பேருந்து வண்டி புறப்பட்டது?

........................................................................................................

41. பேருந்து வண்டி எவ்விடத்தை நோக்கிச் சென்றது?

........................................................................................................

........................................................................................................

**பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.**

42. Milk ........................................ 43. Teeth ........................................

44. Televison ........................................ 45. November ........................................

**பின்வரும் சிங்களச் சொல்லை தமிழில் தருக.**

46. சிஸ்யா ........................................ 47. மம ........................................

**பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

48. கடிகாரமொன்றின் நிமிடமுள் 2 இலும், மணிமுள் 12 இலும் நின்றால் என்ன நேரம்?
1. 2 மணி 2. 12 மணி 3. 12 மணி 10 நிமிடம்

49. நீளத்தை அளப்பதற்குப் பயன்படுத்தக்கூடியது?
1. நிறுத்தற் கடிகாரம் 2. அளவுநாடா 3. விற்றராசு

50. தார் வீதியில் செல்லக்கூடியது?
1. ஓடம் 2. புகைவண்டி 3. சைக்கிள் வண்டி


51. தாவரங்களில் பூச்சிகளைக் கவரத்தக்க பகுதி?
1. நிறஇலை 2. பூ 3. பழம்


52. 12 வயதுடைய ஒருவரை அவதானிக்கத்தக்க இடம் எது?
1. பாடசாலை 2. அலுவலகம் 3. தியேட்டர்


53. பார்வை தெரியாத ஒருவரை அடையாளம் காண்பதற்கு உதவுவது?
1. வெள்ளைப் பிரம்பு 2. வெள்ளை உடை 3. கறுப்புக் கண்ணாடி

54. வைத்தியருடன் தொடர்புடையவர்?
1. தாதி 2. ஆசிரியர் 3. நோயாளி

**பின்வரும் உருக்களை அவதானித்து, இந்த உருக்களின் பயன்பாடு பற்றி புள்ளிக் கோட்டில் எழுதுக.**


உரு - 1


உரு - 2


உரு - 3

55. உரு - 1 : ........................................................................................

56. உரு - 2 : ........................................................................................

57 உரு - 3 : ........................................................................................





**தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012**
பகுதி - I
2 மணி

# கல்வி முரசு

வெளியீடு 08

**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**



**கீழே தரப்பட்ட பந்தியை வாசித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.**

பொறுமையின் சிகரமாம் பூமாதேவியை கெளவி மூடிக்கொண்டிருந்த காரிருளானது மெல்ல மெல்ல விலகிக் கொண்டிருக்கிறது. வானின் உச்சியிலே பளபளவென்று வைரங்களை வாரி இறைத்தது போல பிரகாசித்துக் கொண்டிருந்த சின்னஞ்சிறு விண்மீன்களின் வண்ண ஒளி படிப்படியாகக் குறையத் தொடங்குகிறது. கிழக்கு வானம் செக்கச் சிவந்து பிரகாசித்த வண்ணம் இருக்கிறது. ஆதவன் தனது பொன்மயமான அழகிய ஒளிக்கதிர்களைப் பூமாதேவியின் மீது மெல்ல மெல்லப் படரவிடுகின்றான். தொடர்ந்து கீழ் வானில் பஞ்சு போன்ற முகில் கூட்டங்களுக்கு மத்தியிலே தங்கத் தகட்டைப் போன்று கதிரவன் மேலே எழத் தொடங்குகின்றான். தாமரை மலர்கள் தம் தலைவனின் வருகை கண்டு தலைநிமிர்ந்து முகமலர்ந்து, மொட்டவிழ்ந்து உவகையுடன் வரவேற்கின்றன. அங்கும் இங்கும் மக்களின் நடமாட்டம் தென்படுகிறது. பறவைகளின் குதூகலமான இனிய நாதங்கள் வானில் பரவுகின்றன. ஆலயங்களில் மணியோசை மக்களை அகங்குளிரச் செய்கின்றன. வெள்ளைப் புறாக்களைப் போன்று பாடசாலைச் சிறார்கள். ஆகா!............என்ன இனிய காட்சி.

01. "வானம்" என்பதற்கு ஒத்த சொல் தருக?

........................................................................................................

02. இருக்கிறது என்பதை இறந்த காலத்தில் எழுதுக?

........................................................................................................

03. பந்தியில் காணப்படும் அடுக்கு மொழிச் சொல் ஒன்றினை எழுதுக.

........................................................................................................

04. மணியோசை என்பதைப் பிரித்து எழுதுக.

........................................................................................................

05. "அங்கும் இங்கும் மக்களின் நடமாட்டம் தென்படுகிறது" இவ் வாக்கியத்தின் எழுவாய் எழுதுக?

........................................................................................................

06. உவகை என்பதற்கு எதிர்ச்சொல் தருக?

........................................................................................................

07. பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துடைய சொல் தருக?
1) விண்மீன் ........................................................................................
2) ஆதவன் ........................................................................................

08. 1) பந்தியில் காணப்படும் இணைமொழிச் சொல் ஒன்றினை எழுதுக.

........................................................................................................

2) அடுக்கிடுக்குத் தொடர்ச் சொல் ஒன்றை எழுதுக.

........................................................................................................

09. பின்வரும் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.
1) மலர் ........................................ 2) பாடசாலை ........................................

10. மேலே உள்ள பந்தியில் இரட்டை மொழியினை எழுதுக.

........................................................................................................

**கீழ்வரும் படத்தினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினைத் தெரிவு செய்க.**




11. டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை படைத்த வீரர் யார்?
    1. சனத்ஜெயசூரிய 2. முத்தையா முரளிதரன் 3. சௌரவ் கங்குலி
12. 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை சுவீகரித்த அணி எது?
    1. இந்தியா 2. இலங்கை 3. பாகிஸ்தான்
13. எந்த நாட்டு வீரர் தக்கவைத்திருந்த சாதனையை முரளிதரன் கைப்பற்றினார்?
    1. பாகிஸ்தான் - அப்ரிடி
    2. அவுஸ்ரேலியா - சேன்வோன்
    3. இந்தியா - கபில்தேவ்
14. கூடுதலாக டெஸ்ட் விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய சாதனையை முரளிதரன் எந்த நாட்டில் படைத்தார்?
    1. இந்தியா 2. இலங்கை 3. அவுஸ்ரேலியா
15. படத்தில் முரளிதரனுக்குப் பின்னால் நிற்பவர் யார்?
    1. சிறந்த பார்வையாளர் 2. சிறந்த நடுவர் 3.சிறந்த பந்துவீச்சாளர்

**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

16. நகரங்களில் வீடு கட்டுவதற்கு அதிகளவில் பயன்படுத்தும் கல்.
    1. சிறுகல் 2. சுண்ணாம்புக்கல் 3. சிமெந்துக் கல் 4. கருங்கல்
17. தளபாடங்கள் செய்வதற்கு மிகவும் பொருத்தமான மரம்.
    1. பலாமரம் 2. புளியமரம் 3. தென்னைமரம் 4. தேக்குமரம்
18. கிராமங்களில் வசிக்கும் மக்கள் பயணத்தின்போது அதிகளவில் பயன்படுத்தும் போக்குவரத்துச் சாதனம்.
    1. மாட்டுவண்டி 2. விமானம் 3. படகு 4. துவிச்சக்கர வண்டி
19. சில நகரங்களில் சிறுமழை பெய்ததுமே வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது. இதற்குக் காரணம்.
    1. நெருக்கமான வீடுகள் 2. நீர் வடிய மண் இன்மை
    3. அதிகரித்த சனத்தொகை 4. வடிகாலமைப்புச் சீரின்மை
20. தாவரம் ஒன்றின் பழங்கள், வித்துக்கள் மயிர்களை, முட்களை, சதைப்பிடிப்பான பகுதியை, ஒட்டும் தன்மையைக் கொண்டிருப்பதன் பிரதான காரணம்.
    1. விலங்குகளைக் கவர்தல் 2. விலங்குகளில் ஒட்டுதல்
    3. பரம்பலடைதல் 4. விலங்குகளைக் குத்துதல்
21. 


    அருகேயுள்ள பகுதியுடன் தொடர்புடைய திணைக்களம்.
    1. கல்வி 2. சுகாதாரம்
    3. தபால் 4. தொலைத்தொடர்பு

**பின்வரும் வாக்கியங்களை இணைத்து எழுதுக?**

22. மாலா பாடசாலைக்கு ஆயத்தமானாள்.
    மாலா பஸ் வண்டியில் புறப்பட்டாள்.

    ........................................................................................................................

23. மயூரன் மைதானத்தில் விளையாடினான்.
    கண்ணன் மைதானத்தில் விளையாடினான்.

    ........................................................................................................................

**கீழே தரப்பட்ட தமிழ்ச் சொற்களை ஒத்த சிங்களச் சொற்களை தமிழ் எழுத்துக்களில் பிழையின்றி எழுதுக.**

24. அதிபர் ..................................................
25. மாம்பழம் ..................................................
26. புத்தகம் ..................................................
27. மேசை ..................................................



**சுருக்கமான விடை தருக?**

28. உணவு சமைக்கப் பயன்படும் பூக்கள் இரண்டு தருக?
    1) .................................................. 2) ..................................................
29. தாவர உண்ணிகள் இரண்டு தருக.
    1) .................................................. 2) ..................................................
30. தச்சுத் தொழிலாளி பயன்படுத்தும் இரண்டு உபகரணங்கள் தருக.
    1) .................................................. 2) ..................................................
31. தோற்கருவிகள் இரண்டு தருக?
    1) .................................................. 2) ..................................................
32. மாப்பொருள் உணவுகள் இரண்டு தருக?
    1) .................................................. 2) ..................................................
33. பூரணமான உணவுகள் இரண்டு தருக.
    1) .................................................. 2) ..................................................
34. இலங்கையின் தேசியக் கொடியின் நிறங்கள் இரண்டு தருக?
    1) .................................................. 2) ..................................................


**பின்வரும் பந்தியை வாசித்து அதைத் தொடர்ந்து நடைபெறும் நிகழ்வு பற்றித் தொடர்ந்து எழுதுக.**

35. அன்று வழமைபோல் ஆதவனும் கீழ் வானில் மலர்ந்துவிட்டான். என்றும் போல சகல விடயங்களும் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. எமது வீடு அமைந்திருந்தது கடற்கரைப் பிரதேசம் என்பதால் கடலலையின் ஓசை வழமைபோல் கேட்ட வண்ணம் இருந்தது. நான் மேசையில் அமர்ந்து எனது பாடங்களைப் படித்துக்கொண்டிருந்தேன். வெளியே சென்றுவிட்டு வீடு திரும்பிய எனது தந்தை வேகமாக வந்தார். வந்ததும் இன்றைக்கு நான் கடலைப் பார்த்தேன். கடலில் ஏதோ ஒரு வித்தியாசம் தெரிகிறது என்று சொல்லி முடிப்பதற்குள் அலையின் பேரொலியும், ஏதோ வெடித்த சத்தமும் எம்மை அதிரவைத்தது. உடனே நானும் எனது பெற்றோரும் பதற்றத்துடன் வெளியே ஓடி வந்தோம். என்ன அமைதியாக இருந்த கடல் அன்னை பொங்கியெழுந்து கொண்டிருந்தாள். சற்று நேரத்தில் பொங்கி வந்த கடல் அன்னை திடீரென்று தன்னை உள்வாங்கிவிட்டாள். என்ன! ஆச்சரியம்.......................... கடலும் பாறைகளும் படிந்த தரையாகக் காட்சியளித்தது. ஆனால் கண்ணிமைப்பதற்குள்ளே.....................................

இதனைத் தொடர்ந்து நடந்தவற்றை விபரிக்கும் வகையில் ஆறு வாக்கியங்கள் எழுதுக.

(ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு சொற்களாவது இடம்பெற்றிருக்க வேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலைத் தொடர்பு திருத்தமானதாக இருத்தல் வேண்டும்.)

**கீழ்வரும் படங்களின் சரியான தமிழ்ச் சொல்லை புள்ளிக்கோட்டில் எழுதுக.**




36. ..................................................



37. ..................................................



38. ..................................................



39. ..................................................



தமிழ் சிவில் சமூகம் என்ற பெயரில் கடந்த 13 ஆம் திகதி பலரது கையொப்பங்களுடன் வெளியிடப்பட்ட அறிக்கையானது கூட்டமைப்பினருக்கு பெரும் சங்கடத்தையும் எரிச்சலையும் ஏற்படுத்தி உள்ளது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரை அவர்களின் தற்போதைய பிரதான இலட்சியமும் கொள்கையும்

# சிவில் சமூகத்தின் கோரிக்கையை கூட்டமைப்பு ஏற்குமா?

தேர்தல் களில் போட்டியிடுவதும் தேர்தல்களில் வெற்றி பெறுவதுமேயாகும்.

நிலைமை இவ்வாறு இருக்கையில் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலை கூட்டமைப்பு புறக்கணிக்க வேண்டும், தேர்தலில் போட்டி இடக்கூடாது என்று விடபட்டுள்ள அறிக்கையானது கூட்டமைப்பிற்கு பச்சைப் பாகற்காயை கட்டாயப்படுத்தி சாப்பிடக் கொடுத்த அறிக்கை போன்று இருந்துள்ளது.

இந்த அறிக்கை தொடர்பில் யாழில் உள்ள ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்த போதிலும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரால் நடத்தப்படும் பத்திரிகையில் இதற்கு பெரியளவில் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. ஏன் எனெனில் மாகாண முதல்வர் பதவிக்கு, பத்திரிகையாளர் என்று கூறப்படும் தனது மைத்துனரை களம் இறக்குவதற்காய் அப்பத்திரிகை நிர்வாகி துடிக்கிறார் என்பது பரகசியம். இதற்காக எனன விலையை கொடுக்கவும் அவர் தயாராக உள்ளார். மாகாண முதல்வருக்கு உரிய தகுதிகள் அனைத்தும் அவருக்கே உள்ளதாகவும் இவர் கூறிவருகிறார்.

விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் அன்டன் பாலசிங்கத்தின் செல்லப்பிள்ளையாக இருந்த இந்த பத்திரிகாதிபரின் மைத்துனர், பாலசிங்கத்திற்குப் பின் தானே புலிகளின் அரசியல் ஆலோசகர் என அப்போது கூறி வந்தார். ஆனால் புலனாய்வுத்துறை பொறுப்பாளராக இருந்த பொட்டு அம்மானிற்கு இவரைக் கண்ணில் காட்டவே கூடாது.

சமாதான காலத்தில் ஏ-9 பாதை திறக்கப்பட்ட போது தரைவழியாக வன்னிக்குச் சென்று பிரபாகரனை தனிப்பட்ட முறையில் சந்தித்த பத்திரிகையாளர்களில் இவரும் ஒருவர். வழமையான பிரபாகரனின் சந்திப்புகளில் அதுவும் பத்திரிகையாளர்களை சந்திப்பதென்றால் பொட்டு கட்டாயம் கூடவே இருப்பார். ஆனால் இவருடனான சந்திப்பில் வேண்டும் என்றே பொட்டு கலந்து கொள்ளவில்லை.

புலிகளின் அரசியல் ஆலோசகராக அன்ரன் பாலசிங்கத்தின் பின் பத்திரிகையாளர் "தராக்கி" எனப்படும் சிவராமை நியமியுங்கள் என பொட்டு பிரபாகரனிடம் கூறி இருந்தார். ஆனால் "தராக்கி" கொழும்பில் கொல்லப்பட்டதை அடுத்து அத்திட்டம் கைவிடப்பட்டது.

சிவராம் உயிருடன் இருந்த காலத்தில், ஜெனிவாவில் அரசிற்கும் புலிகளிற்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் போது பாலசிங்கத்தை சந்திக்கச் சென்ற சிவராமை, இந்தப் பத்திரிகையாளர் பாலசிங்கத்திற்கு அருகில் இருந்து போட்டுக் குடுத்ததாகவும் கூறப்பட்டது. இதனால் சிவராமை பாலசிங்கம் திட்டித் தீர்த்ததாக தனது ஊடக நண்பர்களிடம் கூறி சிவராம் கவலைபட்டுள்ளார். கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் முன்னாள் பத்திரிகையாளர்களுமான அரியநேத்திரன். ஜெயானந்தமூர்த்தி போன்றோரிடம் கேட்டால் அந்த துயரத்தை இப்போதும் சொல்வார்கள்.

இவ்வாறு அண்டல்கள், கட்டை இறுக்குதல் உட்பட பல கலைகளையும் தன்னைப்போல் கற்றுத்தேர்ந்த மைத்துனரை மாகாணசபை முதலமைச்சர் வேட்பாளராக முன்நிறுத்த கூட்டமைப்புப் பத்திரிகாதிபர் துடிக்கின்றார்.

இதேவேளை, தமிழ் சிவில் சமூகம் என முளைத்திருக்கும் இவர்களை எப்படி வெட்டி ஓடுகிறோம் பாருங்கள் என கூட்டமைப்பினர் சவால் விடுத்துள்ளனர். மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் நாங்கள். மக்களே எமமிடம் ஒன்றும் கேட்கவில்லை. இவர்கள் என்ன பேச்சைப் பற்றி கேட்பது என்று சீறுகின்றனர் கூட்டமைப்பினர்.

தமிழ் சிவில் சமூகத்தின் அறிக்கையில், வடக்கு மாகாண சபைத் தேர்தலை கூட்டமைப்பு புறக்கணிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. 13 ஆம் திருத்தத்தை ஏற்கமாட்டோம் என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் மக்களிடமிருந்து ஆணை பெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பை மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட வைத்து அத்தேர்தலில் அது வெற்றிபெறுவதை அரசாங்கம் விரும்புகின்றதென்றால் அதற்கான உள்நோக்கம் பூடகமானதல்ல. மாகாண சபை முறைமையினை தமிழர்கள் ஒரு தீர்வாக ஏற்றுக்கொண்டு விட்டதாக பிரசாரம் செய்வதற்காகவே அரசாங்கம் இதனை முயற்சிக்கின்றது.

ஆகவே மாகாண ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் இன்னும் மேலதிகமாக கேட்டு வாங்கலாம் என்ற உபாயம் ஆபத்தானது. மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகளுக்குக் கூட தீர்வுகளைத் தரமுடியாத இவ்வகை இடைக்காலத் தீர்வுகளால் எந்தப் பயனும் இல்லை. வடக்கு கிழக்கு இணைப்பு என்பது ஒருபோதும் விட்டுக்கொடுக்க முடியாதது. பேச்சுவார்த்தைக்கு உட்படுத்த முடியாதது. மாகாணசபையை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றும தறுவாய் என்பது எமது நீண்ட அரசியல் பயணத்தின் அவல முடிபாக அமைந்துவிடும். அத்தகைய நிகழ்வு ஈற்றில் முற்றுமுழுதாக அரசியல் முள்ளிவாய்க் காலாகவும் அமைந்துவிடும். இது நடைபெறாமல் தடுக் கும் வரலாற்றுக்கடமை தமிழ்த்தேசியக் கூட்டமைப் பிடமே இன்று உள்ளது என்கிறது சிவில் சமூகத்தின் அறிக்கை.

இந்த அறிக்கைக்கு கூட்டமைப்பு கூறப்போகும் பதில் இவ்வாறு: "நாங்கள் தேர்தலை புறக்கணித்தால் அரசாங்கம் மேற்குலக நாடுகளிடம் எங்களை குழப்பவாதிகள் என்று முறையிடும். இது தமிழர்களிற்கு களங்கத்தை ஏற்படுத்தும். நாங்கள் ஜனநாயகவாதிகள், எங்களுக்கு மக்கள் பலம் உண்டென்பதைக் காட்டவும் சர்வதேச தலையீட்டை வலியுறுத்தவும் இத்தேர்தலை நாம் பயன்படுத்த வேண்டும்.

இத்தேர்தலில் நாம் வென்றவுடன் கிழக்கு மாகாண சபைத்தேர்தலை அரசு நடத்தும் போது அதிலும் நாம் வெல்வோம். இதன் பின் இரு சபைகளிலும் தீர்மானம் நிறைவேற்றி வடக்கு கிழக்கை இணைக்க அழுத்தம் கொடுப்போம். இதை அரசாங்கம் ஏற்காவிட்டால் இரண்டு மாகாணசபைகளிலும் உள்ள அனைத்து உறுப்பினர்களும் இராஜினாமா செய்து சர்வதேசத்திற்கு எமது எதிர்ப்பை வெளிப்படுத்துவோம்" எனக்கூறி தேர்தலை எதிர்கொள்வதென கூட்டமைப்பினர் முடிவுசெய்வர்.

கூட்டமைப்பினர் கூறப்போகும் நியாயம் தமிழ் சிவில் சமூகத்தை மட்டுமல்ல தமிழ் மக்களையும் ஏமாற்றுவதாகவே இருக்கப்போகின்றது. அதுசரி, முள்ளிவாய்க்காலில் யுத்தம் நடந்த போது பதவியைத் துறக்காதவாகள் நீங்கள், மாகாணசபைக்குத் தெரிவாகும் உங்களது கட்சி உறுப்பினர்கள் மட்டும் நீங்கள் சொன்னவுடன் பதவியைத் துறந்து விடுவார்களா? எல்லாம் அவனுக்கே வெளிச்சம். ஓம் சரவணபவ.

- த. கடலவன்

# மீண்டும் புத்துயிர் பெறும் பாசிசம்?

(தோழர் றொபேட் நினைவாக சுகு - ஸ்ரீதரன் எழுதிய கட்டுரையிலிருந்து)

சமூகத்தை வெறும் மந்தைக் கூட்டமாக மாற்றி அரசியல் பண்ணும் மேய்ப்பர்கள் சமூகத்தில் அதிகரித்து விட்டார்கள். சமூகத்திற்கு அறிவு தேவையில்லை என இவர்கள் கருதுகிறார்கள்.

புலம்பெயர் தளத்திலும் நாட்டினுள்ளும் பிழைப்பு நடத்தும் பேர்வழிகளை சமூகம் தாங்கிப்பிடித்தால் சரி என்ற நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. என்ன கஷ்டங்கள், துன்பங்கள் துயரங்கள் இருந்தாலும் தமிழ் மக்கள் இவர்களை சகிக்க வேண்டும் இவர்களுடைய நலன்களுக்காக தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்ற சீரழிந்த, பாசிச அரசியல் இங்கு புத்துயிராக்கப்படுகிறது.

இதனால் இலங்கையில் தமிழர்களின் வாழ்வு மேலும் மேலும் மோசமடையும் நிலை தோன்றியுள்ளது.

தீவிர இராணுவ மயமாக்கலையும், கலாசார, பொருளாதார ஆக்கிரமிப்புக்களையும் இச்சக்திகள் விரும்புகின்றன. மக்களின் சுதந்திரமான வாழ்வின் மீது இவர்களுக்கு எந்த அக்கறையும் கிடையாது.

இந்த மேய்ப்பர்கள் குற்றுயிரான சமூகத்தை மரணிக்கச் செய்து வாழ முனைகிறார்கள்.

இன்று மக்களின் மீள் குடியேற்றம் பற்றி வாய் கிழியப்பேசும் பலர் மானசீகமாக ஆஸ்பத்திரியையும், வீடுகளையும், நூல் நிலையங்களையும், வீதிகளையும், இடிபாடுகளாக குண்டும் குழியுமாகவும் வைத்திருக்க விரும்பியவர்கள்.

வடக்கு-கிழக்கு ஒரு சுடுகாட்டு காட்சி கூடமாக இருக்க வேண்டும் அதில் தமது பிழைப்பு நடக்கவேண்டும் என்று அங்கலாய்த்தவர்கள்.

இன்று யாழ்ப்பாணத்தில் டாக்டர்களாக இருக்கும் சிலர் யுத்தத்திற்கு பிந்திய சூழலில் சௌகரியமாக வசதிகளுடன் வடிவமைக்கப்பட்ட தனியார் மருத்துவ நிலையங்களில் தொழில் செய்பவர்கள். பல ஆயிரம் ரூபாக்களை மக்களிடம் அறவிடுபவர்கள். இவர்களுடன் ஒரு சில பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், ஆசிரியர்களும், வங்கி அதிகாரிகளும், சட்டத்தரணிகளும் அடக்கம். இன்று தேசியத்தின் செம்மல்களாக போலி நாடகம் ஆடுகிறார்கள். மக்களின் அதிகாரத்தை புலியிச எதேச்சாதிகார பாணியில் தமது கைகளில் எடுக்க முனைகிறார்கள்.

மதங்கொண்ட மதம் ஒருவித போதை வஸ்து. அது இலங்கையின் பௌத்த பீடாதிபதிகளுக்கு மாத்திரமல்ல எமது சில வணபிதாக்களுக்கும், மகாசன்னிதானங்களுக்கும், சிவநெறிச் செம்மல்களுக்கும் கூட பொருந்தும். மக்களின் மத நம்பிக்கையை துஷ்பிரயோகம் செய்து ஜனநாயக விரோத பாசிசத்தின் கூறுகளை விதைக்க முனைகிறார்கள். மதத்தை அரசியல் அதிகாரமாகவும் மக்களால் தெரவு செய்யப்பட்டவர்களை பொம்மைகளாக்கவும் முயல்கிறார்கள்.

இரத்தமும் சதையுமாக சமூக நிலைமைகளை அனுபவ ரீதியாக அறிந்தவர்களுக்கு, உணர்ந்தவர்களுக்கு தேசியம் சுயநிர்ணய உரிமை பற்றி இவர்கள் போதிக்க முற்பட்டிருக்கிறார்கள். மற்றவர்களை உதிரிகள் என்னும் இவர்களை தற்குறிகள் என்று கூறுவதில் எனக்கு எந்த மனக்கிலேசமும் இல்லை.

இவர்களும் இவர்களது கருத்தியல் ஆசான்களும் தான் படுகொலை அரசியலுக்கு நியாயம் சொன்னவர்கள். இரண்டு தலைமுறைகளின் அழிவுக்கு இவர்களும் பொறுப்பாளிகள்.

தவிர தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ன செய்யவேண்டும் என்று சொல்ல முற்பட்டிருக்கிறார்கள். அதாவது வரும் மாகாணசபைத் தேர்தலில் பங்குபற்றக் கூடாது என்று.

சரியோ பிழையோ தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள். ஆனால் அவர்களுக்கு ஆணையிடுபவர்களின் அறிக்கையில் ஜனநாயக விரோத பாசிசத்தின் வாசனை அடிக்கிறது. இன்னின்னாரெல்லாம் தீண்டத் தகாதவர்கள் என்கிறார்கள்.

தோழர் றொபேட் ஜனநாயகத்தின் பால் அவருக்கிருந்த அக்கறைக்காகவே அவர் நயவஞ்சகமாக கொல்லப்பட்டார். இவ்வாறு பல்லாயிரக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்கள். பலருடைய அர்ப்பணிப்பில் ஜனநாயகம் நிலை நாட்டப்பட வேண்டியிருந்தது. ஜனநாயகத்தை முழுமை பெறச்செய்யும் பணியில் நாம் நீண்டதூரம் பயணிக்க வேண்டும். இராணுவ மயமாக்கல் கலாசார ஆக்கிரமிப்புக்களிலிருந்தும் பாசிச அரசியலின் சாயலிலிருந்தும் விடுபட வேண்டும்.

அதற்கு குறைந்த பட்சம் தமிழ், முஸ்லிம், மலையக மக்களுக்கான அர்த்த பூர்வமான அரசியல் அதிகார அலகுகள் வேண்டும்.

பல்லின சமூக நாடாக இலங்கை



Com.Robert (Suhathiran)

மாறுவது மாத்திரமல்ல. அநீதியான சமூக அமைப்பு எல்லாவற்றிலுமே தீவிரமான மாற்றங்கள் தேவை.

தோழர் றொபேட் சகலவிதமான ஒடுக்குமுறைகளுக்கும், பாசாங்குத் தனங்களுக்கும் எதிராகவே செயற்பட்டார். கலை இலக்கிய ஈடுபாடும் அவரிடமிருந்தது. மார்க்சிய அரசியல் பொருளாதாரத்தை விளங்கிக்கொள்ள முற்பட்டவர்.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு பின்னரான உலக நிலைமைகள் பொதுவுடைமை இயக்கத்தின் எதிர்காலம், இயக்கவியல் பற்றிய விவாதங்களில் ஈடுபாட்டுடன் பங்கு பற்றியவர்.

1980 களின் நடுப்பகுதியில் அவர் சிறையில் இருந்தபோது ஏராளமான நண்பர்கள் இருந்தார்கள். அவரின் நேர்மை, வசீகரம், ஆளுமை, கவித்துவம் எனபன இயல்பாகவே அதனை ஏற்படுத்தியிருந்தன.

*பாதகம் செய்பவரைக் கண்டால் பயங்கொள்ளலாகாது பாப்பா. மோதி மிதித்து விடு பாப்பா அவர் முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா - பாரதி*

# ஊழலை ஒழிப்பதற்கு வலுவான சட்டம் வலியுறுத்தி ஹசாரே உண்ணாவிரதம்



(மும்பை)

ஊழலை ஒழிக்க வகை செய்யும் லோக்பால் மசோதாவை கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் மத்திய அரசு அறிமுகம் செய்தது. ஆனால் இந்த மசோதா வலுவானதாக இல்லை என்று பிரபல சமூக சேவகர் அன்னாஹசாரே எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

லோக்பால் அமைப்பில் சி.பி.ஐ.யை கொண்டு வரவேண்டும் என்பது உட்பட மூன்று முக்கிய கோரிக்கைகளை அன்னா ஹசாரே குழு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. தங்கள் கோரிக்கையை நிறைவேற்றக்கோரி அன்னா ஹசாரே மும்பையில் 3 நாட்கள் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அறிவித்தார்.


அதன்படி மும்பை பந்த்ரா-குர்லா வளாகத்தில் உள்ள எம்.எம்.ஆர்.டி.ஏ. மைதானத்தில் நேற்றுப் பகல் 11 மணிக்கு 3 நாள் உண்ணாவிரதம் தொடங்கியது.

மும்பையில் அன்னா ஹசாரே உண்ணாவிரதம் தொடங்கிய அதே நேரத்தில் டில்லி, கொல்கத்தா, சென்னை, பெங்களூர், ஹைதராபாத் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் அன்னா ஹசாரே ஆதரவாளர்கள் உண்ணாவிரதப் போராட்டத் தைத் தொடங்கியுள்ளனர்.

இதேவேளை அன்னாவின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு நடிகர் ரஜினிகாந்தும் ஆதரவு தெரிவித்துள்ளார்.

சென்னையில் அன்னாவுக்கு ஆதரவாக ஊழலுக்கு எதிரான இந்திய அமைப்பினர் ரஜினிக்கு சொந்தமான ராகவேந்திரா திருமண மண்டபத்தில் உண்ணாவிரதம் இருக்கின்றனர்.

இதற்காக ரஜினி தன் திருமண மண்டபத்தை இலவசமாகக் கொடுத்துள்ளதாகவும் நேரில் நேற்று வருகை தந்து உண்ணாவிரதம் வெற்றி பெற வாழ்த்தியதாகவும் அவ்வமைப்பின் முக புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.





# சந்தேகங்கள் அனைத்திற்கும் தீர்வு அணுமின் நிலைய செயற்பாடு விரைவில்

(சென்னை)

கூடங்குளம் அணுமின் நிலையம் குறித்த அனைத்து சந்தேகங்களும் தீர்த்து வைக்கப்பட்டன. விரைவில் அணுமின் நிலையம் செயற்படத் தொடங்கும என மத்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் ஆர்.சிதம்பரம் அறிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம் ஹைதராபாத்தில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட அவர், கூடங்குளம் அணுமின நிலையம் குறித்து செய்தி யாளர்களுக்குப் பேட்டி அளித தார். அப்போது அவர் கூறிய தாவது:



கூடங்குளம் அணுமின் நிலையம் தொடர்பாக, எதிரப்பாளர்கள் தெரிவித்த அனைத்துச் சந்தேகங்களையும் பிரதமர் நியமித்த நிபுணர் குழுவினர் தீர்த்து வைத்து விட்டனர். எனவே கூடங்குளம் அணுமின்நிலையம் விரைவில் செயற்படத்தொடங்கும் என நம்புகிறேன்.

கூடங்குளத்தில் உள்ளது போன்ற 16 அணு உலைகள் ரஷ்யாவில் செயற்பட்டு வருகின்றன. ரஷ்யாவுக்கு வெளியே 9 அணு உலைகள் இயங்கி வருகின்றன. சீனாவில் அது போன்ற இரு உலைகள் சமீபத்தில் செயற்பாட்டுக்கு வந்துள்ளன.

வடிவமைப்பு மற்றும் செயற்பாட்டில் அணு உலை பாதுகாப்பு முறையைப் பொறுத்தவரை, உலகத்தின் சிறந்த பாதுகாப்பு முறை இந்தியாவில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் துறையில், நன்கு பயிற்சி பெற்ற பொறியாளர்கள் நம்மிடம் உள்ளனர் என அவர் தெரிவித்தார்.

சிதம்பரம் இவ்வாறு அறிவித்தாலும், பாதுகாப்பு அச் சுறுத்தல் காரணமாக, கூடங்குளம் அணுமின் நிலை யத்துக்கு எதிராக அப்பகுதி மக்கள் தற்போதும் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. இப்போராட்டத்தை முன்நின்று நடத்துபவர்கள்மீது தேசவிரோத வழக்குகளும் பதிவு செய்யப பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

## ஹெரோயின் கடத்த முயன்றவர் சிக்கினார்

(சென்னை)

இலங்கைக்கு ஹெரோயின் கடத்த முயன்றவரை ராமநாதபுரம் பஸ் நிலையத்தில் கியூ பிரிவு பொலிஸார் கைது செய்தனர்.

ராமேஸ்வரம் தங்கச்சி மடம் பகுதியைச் சேர்ந்த தன்ராஜ் என்கிற புஷ்பா தன்ராஜ் இலங்கைக்கு 1.5 கிலோ ஹெரோயினை கடத்த முயன்றபோது கியூ பிரிவு பொலிஸாரிடம் பிடிபட்டார். இதன் மதிப்பு ரூ 1.5 கோடியாகும். தன்ராஜ் மீது ஏற்கனவே போதைப்பொருள் கடத்தியதாக பல்வேறு வழக்குகள் உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# நத்தம் விஸ்வநாதனை முதல்வராக்க சசிகலா குழுவினர் முயன்றதாகத் தகவல்

(சென்னை)

அமைச்சர் நத்தம் விஸ்வநாதனை முதல்வர் பதவியில் அமர்த்த சசிகலா குழுவினர் முயற்சி செய்ததாக தகவல் வெளியாகியுள்ளது. அதே போல இன்னொரு அமைச்சரான எஸ்.பி.வேலு மணியும் சசிகலா குழுவின் முதல்வர் வேட்பாளர் பட்டியலில் இருந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன

முதல்வர் ஜெயலலிதாவுக்கு சொத்துக் குவிப்பு வழக்கில் பாதகமான தீர்ப்பு வந்தால் அடுத்து முதல்வராக யாரை நியமிப்பது என்ற ஆலோசனையில சசிகலா குழு இறங்கியது, அதற்காக சோதிடம் பார்த்தது, 2 அமைச்சர்களின் பெயர்களைக் காட்டி அவர்களில் யாரை அமைச்சராக்கலாம் என ஆலோசனை கேட்டது என்பது பழைய செய்தியாகும் தற்போது அந்த 2 அமைச்சர்கள் யார் என்ற விபரம் வெளியாகியுள்ளது.

அவர்களில் ஒருவர் நத்தம் விஸ்வநாதன் என்றும் மற்றயவர் எஸ்.பி.வேலுமணி என்றும் விபரம் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த இருவரையும்தான் முதல்வர் வேட்பாளர்களாக சசிகலா குழு மனதில் வைத்திருந்ததாக கூறப்படுகிறது. இவர்களில் வேலுமணிக்கே சசிகலா குழுவின் பூரண ஆதரவு இருந்ததாகவும் கூறப்படுகிறது.

காரணம், நத்தம் விஸ்வநாதன் சிரேஷ்ட தலைவர் என்பதால் கடைசி நேரத்தில் அவர் பின்வாங்கி விடலாம் என்ற சந்தேகம் சசிகலா குழுவிற்கு இருந்ததாம்.

இருவரின் பெயரையும் தேர்வு செய்து வைத்திருந்த நிலையில் தான் ஜெயலலிதாவுக்கு சசிகலா தரப்பின் சதித் திட்டங்கள் தெரிய வந்து போயஸ் தோட்டத்திலிருந்தும், கட்சியிலிருந்தும் சசிகலாவை அவர் துரத்தினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விரைவில் அமைச்சரவை மாற்றம் வரும் என்றும் அப்போது விஸ்வநாதன், வேலுமணி ஆகிய இருவரும் நீக்கப்படுவார்கள் என்றும் கூறப்படுகிறது.

# பொருளாதார வளர்ச்சியில் இந்தியா ஐந்தாவது இடத்திற்கு முன்னேறும்

## பொருளாதார வர்த்தக ஆய்வு மையம் தகவல்

(டில்லி)

இந்தாண்டில், பொருளாதார வளர்ச்சியில், பிரிட்டனை, பிரேசில் முந்திவிட்டது எனவும், 2020 இல் உலகின் முதல் 10 உலக நாடுகளில், ஐந்தாவது இடத்திற்கு, இந்தியா வந்துவிடும் எனவும், பொருளாதாரம் மற்றும் வர்த்தக ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பிரிட்டன் தலைநகர் லண்டனில் இயங்கி வரும், பொருளாதாரம் மற்றும் வர்த்தக ஆய்வு மையம், வெளியிட்ட உலகின் பொருளாதார வளரச்சி பெற்ற நாடுகளின் பட்டியலில், இதுவரை ஆறாவது இடத்தில் இருந்த பிரிட்டனை, பிரேசில் பின்னுக்குத் தள்ளி, அந்த இடத்தைப் பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

மேலும், இந்தாண்டில் 10 ஆவது இடத்திலுள்ள இந்தியா, 2020 இல், ஐந்தாவது இடத்திற்கு முன்னேறும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

யூரோ மண்டல பொருளாதார நெருக்கடி தீர்க்கப்பட்டால், அம்மண்டலப் பொருளாதாரம், 0.6 சதவீதம் மட்டுமே சுருங்கும் எனவும், பிரச்சினை தீராவிட்டால், பொருளாதாரச் சுருக்கம், 2 சதவீதம் அளவிற்கு இருக்கலாம் எனவும் அந்த மையம் கூறியுள்ளது.

தொடர்ந்த ஆய்வில், வருங்காலத்தில் ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சி குறைந்து கொண்டே செல்லும் எனவும், ஆசிய நாடுகளின் வளர்ச்சி அதிகரிக்கும் எனவும் தெரிய வருவதாக, மையத்தின் தலைவர் டக்ளஸ் மெக் வில்லியம்ஸ் தெரிவித்துள்ளார்.

# தமிழக அமைச்சரவையில் விரைவில் வருகிறது மாற்றம்

(சென்னை)

தமிழக அமைச்சரவை எந்த நேரத்திலும் மாற்றப்படலாம் என்று போயஸ் தோட்ட வட்டாரத்தில் தகவல்கள் வெளியாகியுள்ளது.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் உயிர்த்தோழி சசிகலா பல்வேறு காரணங்களால் அ.தி.மு.கவை விட்டும், போயஸ் தோட்டத்தை விட்டும் வெளியேற்றப்பட்டார்.

இந்த நிலையில் அவரால் பரிந்துரைக்கப்பட்ட அமைச்சர்கள், ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். அதிகாரிகள் இன்னும் ஏன் மாற்றப்படவில்லை என்று என பத்திரிகையாளர்கள் மற்றும் ஆளும் கட்சி வட்டாரத்தில் விவாதிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் 10 இற்கும் மேற்பட்ட அமைச்சர்கள் மாற்றப்படலாம் அல்லது அமைச்சர்கள் வகிக்கும் துறைகளாவது மாற்றப்படும் என்று கூறப்படுகின்றது. தமிழகத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் பிரதமர் டில்லி புறப்பட்டதும் இந்த மாற்றம் குறித்த அறிவிப்பு வெளியாகலாம் என்று தெரிகிறது.

அமைச்சரவை மாற்றப்பட்டால் புதிய அமைச்சர்களுக்கு ஆளுநர் ரோசையா தான் பதவிப் பிரமாணம் செய்து வைகக வேண்டும் என்பதால் அவரை மாநிலத்தை விட்டு வெளியே செல்ல வேண்டாம் என்று தமிழக அரசு கேட்டுக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

# இந்திய - பாகிஸ்தான் இடையே அணுத்திட்டப் பேச்சுவார்த்தை

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான அணுத்திட்டப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்தப் பேச்சுவார்த்தைகளில் இரண்டு நாடுகளினதும் உயர்மட்டப் பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர்.

அத்துடன் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளைக் கட்டியெழுப்பும் வகையிலும் பேச்சுவார்த்தைகளில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

# இராணுவப் புரட்சியைத் தடுப்பதற்கு பாகிஸ்தானில் முன்கூட்டியே தேர்தல்?



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் ஆட்சியாளர்களுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. எனவே இராணுவத் தளபதிகள் புரட்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றக்கூடும் என்ற பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இராணுவப் புரட்சி ஏற்படும் பட்சத்தில், அதைத் தடுத்து உதவ வேண்டும் என்று அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் கடிதம் எழுதியுள்ளதாகத் தகவல் வெளியானது.

இதுபற்றி விசாரணை நடத்த வேண்டும் என்று உயர்நீதிமன்றில் இராணுவம் மனு செய்துள்ளது. இதற்கு ஆட்சியாளர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இராணுவம் இப்படி தன்னிச்சையாகச் செயற்படக்கூடாது. ஆட்சிக்குக் கட்டுப்பட வேண்டும் என்று ஜனாதிபதி சர்தாரியும், பிரதமர் யூசுப் ராசா கிலானியும் கூறியுள்ளனர்.

இந்த நிலையில் இராணுவத்தின் கை ஓங்குவதைத் தடுக்க, பாகிஸ்தானில் முன்கூட்டியே தேர்தலை நடத்த பிரதமர் கிலானி திட்டமிட்டுள்ளது தெரியவந்துள்ளது. வரும் மார்ச் மாதம் பாகிஸ்தானில செனட் தேர்தல் நடைபெறவுள்ளது. அதன் பிறகு உடனடியாக தேர்தல் நடத்தப்படும் என்று கூறப்படுகிறது. இதற்கான அறிவிப்பு எந்த நேரத்திலும் வெளியிடப்படலாம் என்று தெரிகிறது.

தற்போதைய ஆட்சியாளர்களின் பதவிக்காலம் வருகிற 2013 ஆம் ஆண்டு வரையுள்ளது. எனறாலும் முன்கூட்டியே தேர்தல் வரலாம் என்று தகவல்கள் வெளியாகி உள்ளதால் எதிர்க்கட்சிகளும் தேர்தலைச் சந்திக்கத் தயாராகி வருகின்றன.

# இஸ்ரேலுடனான உடன்படிக்கை அல்நூர் கட்சி மதித்து நடக்கும்

இஸ்ரேலுடன் எகிப்து செய்து கொண்டுள்ள சமாதான உடன்படிக்கையை அல் நூர் கட்சி மதித்து நடக்கும் என அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் உறுதி அளித்துள்ளார்.

எகிப்தில் நடைபெற்று வரும் தேர்தலில் முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பின் சுதந்திரத்துக்கும் நீதிக்குமான அரசியல் கட்சிக்கு அடுத்தபடியாக அதிக சதவிகித வாக்குகளைப் பெற்றிருப்பது ஸலபி அமைப்பின் அல் நூர் கட்சியாகும். இந்தக் கட்சியின் செய்தித் தொடர்பாளரான யுஸ்ரி ஹம்மாத் இஸ்ரேலைச் சார்ந்த இராணுவ வானொலிக்குப் பேட்டி அளித்துள்ளார். அப்போது அவர் இஸ்ரேலுடன் எகிப்து செய்துகொண்டுள்ள சமாதான உடன்படிக்கையை அல்நூர கட்சி மதித்து நடக்கும் எனத்



தெரிவித்துள்ளார்.

இந்த உடன்படிக்கைகளில் ஏதேனும் திருத்தங்கள் செய்ய வேண்டும் என விரும்பினால் அதனை கலந்துரையாடல் மூலம் முடிவு செய்து கொள்ளலாம் என யுஸ்ரி ஹம்மாத் தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறுகையில் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகள் அனைவரும் எகிப்தில் வரவேற்கப்படுவர் என்றும் தெரிவித்தார்.

ஸலபிக் கட்சியைச் சார்ந்த ஒருவர் இஸ்ரேலிய இராணுவ வானொலிக்கு பேட்டியளித்திருப்பது ஆச்சரியத்தை அளிப்பதாக இஸ்ரேலிய அதிகாரி ஏ.எப். செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார். சில தினங்களுக்கு முன்பாக அல்நூர் கட்சியின் பிரதிநிதிகள் இஸ்ரேலிய அதிகாரிகளைச் சந்தித்ததாக வந்த செய்திகளை அல்நூர் கட்சி மறுத்திருந்தது.

# அரேபிய கண்காணிப்பாளர்கள் சிரியாவிற்கு சென்றனர்

வன்முறைகளை கண்காணிக்கும் நோக்கில் 50 அரேபிய லீக் கண்காணிப்பாளர்கள் சிரியாவிற்கு விஜயம் செய்துள்ளனர். அரசாங்கப் படையினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே இடம்பெற்று வரும் மோதல்களில் சுமார் 5000 பேர் உயிரிழந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சாபை தெரிவித்துள்ளது.

கண்காணிப்பாளர்கள் சிரியாவைச் சென்றடைவதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்னர் ஹோம்ஸ் நகரில் இடம்பெற்ற மோதல்களில் 30 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி பஷர்அல் அஸாடிற்கு எதிராக கடந்த மார்ச் மாதம் முதல் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டு ஊடகங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதனால் உயிர்ச்சேத விபரங்களை துல்லியமாக வெளியிடுவதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

மோதல் நிலைமைகளை நேரில் கண்டறியும் நோக்கில் கண்காணிப்பாளர்கள் சிரியாவிற்கு விஜயம் செய்துள்ளனர். மோதல்கள் இடம்பெற்று வரும் முக்கிய நகரங்களில் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

# அவுஸ்ரேலியாவில் வெள்ளம் தடம்புரண்டது பயணிகள் ரயில்

அவுஸ்ரேலியாவின் வட பகுதியில் வெள்ளம் காரணமாக ரயிலொன்று தடம்புரண்டுள்ளதுடன், இரண்டு கார்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

கத்தரினின், தென் டார்வின் பகுதியில் இந்த ரயில் தடம் புரண்டதில் இருவர் படுகாயமடைந்தனர்.

அவுஸ்ரேலியாவில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக, பல பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தொலைத்தொடர்புக் கட்டமைப்புக்கள், போக்குவரத்து, மின்சார வசதிகள் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடும் புயல் மற்றும் வெள்ளம் ஏற்படும் அபாயம் நிலவுவதால் மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு அவுஸ்ரேலிய புவியியல் மையம் குறிப்பிட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# சீன அரசுக்கெதிரான கருத்து மேலும் ஒருவருக்குச் சிறை

சீன அரசாங்கத்துக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டமைக்காக மற்றுமொருவருக்கு 10 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தையும் ஆளும் கட்சியையும் விமர்சித்து கட்டுரை எழுதிய குற்றத்துக்காக சென்சி எனும் மனித உரிமை செயற்பாட்டாளருக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவில் அரசாங்கத்தை விமர்சிப்பவர்களுக்கு அண்மைக்காலத்தில் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டுவருகின்றன.

இது குறித்து மனித உரிமை அமைப்புக்கள் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளன.

# மெய்தான் பாருங்கோ!

## தேசியத்தின் நிறம் என்ன?



ஒரு நாள் காலமை போல என்ர சகபாடி வீட்டை வந்தான். டேய்! மச்சான் சீனாச் சீனா தேசியத்தின் நிறம் என்னடா? ஒருக்காச் சொல்லு பாப்பம் எண்டான்.

வந்தது வரக்கு முன்னம் அவன் இப்பிடி ஏடா கூடமான கேள்வியொண்டைக் கேட்பானெண்டு நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கேல்லை. எனக்கு அவனில சந்தேகம் வர. நான் அவனை ஒரு மாதிரியாப் பார்த்தன்.

என்னடா என்னைப் பாக்கிறாய்? எனக்கு இப்பவெறியில்லை. ராமுழுக்க நித்திரையில்லை. அந்த நேரத்தில உந்தக் கேள்வியை எனக்குள்ள கேட்டுக்கொண்டிருந்தன்.

வெகு நேரத்துக்குப் பிறகுதான் பதில் கிடைச்சுது. அது சரியோண்டு பாக்கிறதுக்குத்தான் நான் இப்ப வந்து உன்னைக் கேட்கிறன். எண்டு சொன்னான்.

எனக்கு ஒரே குழப்பமாகக் கிடந்தது பாருங்கோ. தேசியத்துக்கு அப்பிடியொரு நிறம் இருக்கிறதெண்டு நான் கேள்விப்படேல்லை. இவன் என்னடாவெண்டால்...?

நான் குழம்பிப் போய் நிற்கிறதைக் கண்டு அவன் சிரிச்சுப் போட்டுச் சொன்னான், டேய் மச்சான்... தமிழர்களுக்கான தேசிய மரபைப் பற்றிக் கதைக்கிறதை தேசிய வாதிகள், பழைய கால நாறிப்போன, மூக்கைப் பொத்துற கொள்கைகளைக் காவிக்கொண்டு, சனங்களுக்கு நடுவில அரசியல் வியாபாரம் செய்யிற ஆட்களுக்கு ஒரு நிறம் இருக்குதடா மச்சான்.

எனக்கு இப்பதான் உந்தச் சமயகுரவர் கூட்டத்தைப் பற்றிச் சொல்ல வாறான் எண்டது புரிஞ்சுது பாருங்கோ. எண்டாலும் அவன்ர வாயால என்ன கொட்டுப்படுகுது... எண்டதைப் பாக்க, நான் பேசாமல் இருந்தன். அவன் சொல்லத் தொடங்கினான்,

ஆண்ட தமிழனின் தேசிய உடைவந்து வேட்டி, நஷ்னல், உத்திரியம், உள்ளுக்குப் போடுற பெனியன், முதற்கொண்டு எல்லாமே வெள்ளை நிறம் கண்டியே! வெள்ளை வேட்டிகள் சகிதம் தங்களைத் தேசியவாதிகள் எண்டு சொல்லுற ஆட்களுக்கு தேசியம் என்ன நிறமெண்டது சரியாத் தெரியாது. அப்பிடித் தெரிஞ்சாலும் வெளிக்காட்டமாட்டினம். புழுத்த பயம் கண்டியே!

சொந்த நாட்டில அரசியல் நடத்தேக்கை தேசிய உடுப்புகளை உடுத்துக் கொண்டு, சனங்களுக்கு உசுப்பேத்துற ஆட்கள் வெள்ளைக்காரன்ர நாட்டுக்குப் போனவுடன கறுப்பா மாறியிடுவினம் மச்சான்.

இப்ப கொஞ்ச நாளைக்கு முன்னம் எங்கட வெள்ளை வேட்டித் தேசியங்கள் வெளிநாட்டுக்குப் போனவையல்லோ. அங்கை போனவுடன வேட்டியிலிருந்து எல்லாம் கறுப்பா மாறிப்போச்சுது பாத்தனியே! இயக்கத்தின்ர பசிலன் குண்டுகளை நிமித்தி நட்ட மாதிரி.....வரிசையா நிண்டு படம் எடுத்து பேப்பருக்கு குடுத்து வந்தாரல்லோ! நீ பாக்கேல் லையே? எனக்குச் சிரிப்பு வந்திட்டுது. சிரிச்சுக் கொண்டு பேசாமல் இருந்தன். அவன் சொல்லத் தொடங்கினான்.

டேய் சீனாச்சீனா! உண்மையான தேசியவாதி ஒருநாளும் எந்தவொரு கொள்கையில இருந்தும் தவறமாட்டான். தேசியம் எண்ட போர்வையில எங்கட தமிழ்ச் சனத்துக்கு வெள்ளை உடுப்பைக் காட்டிப் போட்டு வெள்ளைக்காரனுக்கு முன்னால கோட்டும் சூட்டும் மாட்டுறவையின்ர கொள்கை ஒருநாளும் உறுதியானதில்லை. வேசம் அது.

ஒரே பாதை...ஒரே இலட்சியம்...ஒரே சிந்தனை...ஒரே நோக்கு...எண்ட எண்ணத்தோடை இருக்கிறவையெண்டால் ஒருநாளும் நிறம் மாறமாட்டினம்.

இதிலயிருந்து என்ன விளங்குது உனக்கு? சுயலாப சந்தர்ப்பவாத அரசியலுக்கு கொள்கையெண்டது இல்லை. அது தேவைக்கேற்ப உடுப்புகளையும் மாத்தும்! உணர்ச்சி அரசியலையும் நடத்தும் கண்டியே! ஆக...தேசியத்தின் நிறம் இரவில வெள்ளை - பகலில கறுப்பு! அதாவது, கறுப்பினத்தவன்ர நாட்டில வெள்ளை நிறம், வெள்ளைக் காரன்ர நாட்டில கறுப்பு! மேல் நாட்டுப் பாணியில சொன்னால் "பிளாக் அன் வைற்'

இதில இன்னொரு உண்மையையும் சொல்லுறன். என்னதான் தமிழன் தேசிய உடுப்பு உடுத்தாலும், சிங்களவன் பெரும்பாலும் இடறுப்படுகிறேல்லை. உதாரணத்துக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சொல்லலாம். அந்தாள் உந்த அணிசேரா நாடு....அது இதெண்டு ஊருகமெல்லாம் போய் வாறார். ஆனா அவற்ற உடுப்பு நிறம் மாறினதே இல்லை.

கவனிச்சுப் பாத்தனியே? வெள்ளை உடுப்புத்தான் ஒரு உடுப்பு விசயத்திலேயே கலர் மாறுகிற கூட்டம், எங்கட தமிழ்ச் சனத்தின்ர அதுவும் போருக்கை அம்பிட்டு மீண்டிருக்கிற எங்கட கஷ்டம் துன்பம் பற்றிக் கதைக்கவே போகுதுகள். சும்மா விட்டுத்தள்ளு உதுகளை!

-சின்னக்குட்டி சின்னச்சாமி-

# சிறுபான்மை இனத்தவர் பிரதமராக வரமுடியாதிருப்பது கவலையாகும்

## என்கிறார் உயர்கல்வி அமைச்சர்

(கொழும்பு)

நூற்றுக்கு ஒருவீதமாக இருக்கின்ற சீக்கியர் ஒருவர் இந்தியாவில் பிரதமராக பதவி வகிக்க முடிந்தபோதும் சிறுபான்மை இனத்தவர் ஒருவர் இலங்கையின் பிரதமராக முடியாதிருப்பது கவலைக்குரிய விடயமாகும் என்று உயர் கல்வி அமைச்சர் எஸ். பி திஸநாயக்கா தெரிவித்தார்.

கண்டி, மட்டவளை வை.எம்.எம்.ஏ இயக்கத்தினர் மட்டவளை மதீனா தேசியப் பாடசாலையில் ஒழுங்கு செய்த கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் எமது நாட்டை இன, மத பேதமற்ற நாடாக மாற்றவேண்டும் ஆசியாவில் மிகவும் கூடிய கல்வித்தரத்தைக் கொண்ட நாடாக்க முடிந்த எமக்கு இது கடினமான விடயம் அல்ல.

இந்தியாவில் 274 மதங்கள் இருக்கின்றன. பிரதான-மதங்கள் 72 இருக்கின்றன. இன்றும் இந்தியாவில் ஆட்சிபுரியும் கட்சியின் தலைவியாக இருப்பவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். இந்தியாவின் பிரதமர் நாட்டின் ஒருசதவிகிதம் மட்டும் இருக்கின்ற சீக்கிய இனத்தவர். ஆனால் இது எதுவும் இந்திய மக்களுக்கு பிரச்சினை இல்லை.

ஆனால் இலங்கையில் சிங்களவரல்லாத ஒருவர் தலைமைத்துவத்திற்கு வரமுடியும் என்று கேட்டால் அது இயலாது என்றுதான் பதில் கூற வேண்டும். இது கவலைக்குரிய விடயமாகும்.



நாங்கள் பல்கலைக் கழகங்களை ஒருபோதும் இன, மத அடிப்படையில் பிரிக்கமாட்டோம். ஆனாலும் தென்கிழக்கு பல் கலைககழகத்தில் 90 சத வீதமான மாணவர்கள் முஸ்லீம்களாவர். மட்டக் களப்பு பல்கலைக் கழகத்தில் மூன்றில் ஒரு பங்கு முஸ்லீம் மாணவர்கள். நாட்டின் மற்றைய பல்கலைக்கழகங்களில் இனவிகிதாசாரத்திற்கும் சமமாக அதிகமான முஸ்லீம் மாணவர்கள் இருக்கிறார்கள்.

இன்று கூடுதலான அபிவிருத்திப் பணிகள் நடப்பது வடக்கு. கிழக்கு மாகாணங்களுக்கே. நாட்டின் அபிவிருத்தி வேகம் 8 சதவீதம். வடக்கு கிழககில் அபிவிருத்தி வேகம் 24 சதவீதம்.

நாங்கள் வரலாற்றில் தவறு இழைத்து விட்டோம். அந்தத் தவறை மீண்டும் செய்யக் கூடாது- என்றார்

# ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுமாறு ரஷ்யா தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தவென இலங்கை அரசாங்கம் முன்னெடுத்து வரும் திட்டங்கள் குறித்து ரஷ்யா மகிழ்ச்சி வெளியிட்டுள்ளது.


கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை இதற்கு சிறந்த முன்னுதாரணம் என ரஷ்ய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

யுத்தத்தின் பின்னர் பிரச்சினைகளுக்கு தீர்வு காண இலங்கை அரசு உண்மையாக செயற்பட்டுவருவதாக ரஷ்ய வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசேடமாக அனைத்து மத, இன மக்களுக்கும் அவர்களது உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க இலங்கை பாடுபட்டு வருவதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்த இலங்கை அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ரஷ்யா வலியுறுத்தியுள்ளது.

# காணாமற்போனவர்களை மீட்டுத்தர பொலிஸ்மா அதிபரிடம் மனு கையளிப்பு



கடந்த 9 ஆம் திகதி அச்சுவேலியில் காணாமற்போன லலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் தொடர்பாக துரிதமான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸமாஅதிபர் என்.கே.இளங்ககோனிடம் மனுவொன்று கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் குமாரவிடம் இந்த மனு கையளிக்கப்பட்டுள்ளது.

காணாமற் போனவர்களின் உறவினர்களால் யாழ்ப்பாணம், அச்சுவேலி மற்றும் கொஸ்கம பொலிஸ் நிலையங்களில் 3 முறைபபாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட நாம் இலங்கையர் அமைபபின் இணைப்பாளர் உதுல் பரேமரட்ன காணாமற போனமை தொடர்பில் பலவிதமான தகவலகள் வெளியாகியுள்ள போதிலும், விசாரணைகளை முன்னெடுக்கும் நடவடிக்கை மந்தகதியிலேயே இடமபெறுகிறது.

இது சற்று பாரதூரமான விடயம். எனவே, துரிதமான விசாரணைகளை மேற்கொண்டு காணாமற் போனோரை மீட்டுத் தருமாறு கோரி மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பாக பொலிஸ் மா அதிபர் உரிய கவனம் செலுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

# சட்டவிரோத மின் பாவனை இவ்வருடத்தில் 25 பேர் பலி


(கொழும்பு)

சட்டவிரோத மின் பாவனை காரணமாக இவ்வருடத்தில் 25 பேர் உயிரிழந்துள்ளதாக மின் வலு மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமையும் கூட சட்டவிரோத மின் பாவனையால் மத்துரட்ட பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்தனர்.

சட்டவிரோத மின் பாவனையாளர்களால் வருடத்தில் தேசிய மின் கட்டமைப்புக்கு 4 வீதம் சேதம் ஏறபடுவதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால் இலங்கை மின் சார சபைக்கு 6,000 மில்லியன் நட்டம் ஏற்படுவதுடன் தேசிய பொருளாதாரத்தில் 10 வீதம் பாதிபபு ஏறபடுவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.



2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை சட்டவிரோத மின் சார இணைப்புப் பெற்றமை தொடர்பில் 8,452 சம்பவங்கள் பதிவாகியதோடு, அதனால் இலஙகை மின்சார சபைக்கு 236 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக மின் வலு மற்றும் எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

# சஜித்தின் சதி வலையில் வீழ்ந்தார் கருஜயசூரிய

(கொழும்பு)



ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவின் சதி வலையில், கருஜய சூரிய சிக்கியதாக வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கட்சியின் பிரதித் தலைவர் பதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் சஜித் முன்னெடுத்த திட்டத்தில் கரு ஜயசூரிய சிக்கிக்கொண்டதாக அவர் குறிப் பிட்டுள்ளார்.

கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற சிக்கல்களுக்கு சஜித் பிரேமதாசவே காரணம் என அவர் தெரிவித்துள்ளார். எல்பிட்டோயவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொணட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் பிரதித் தலைவர் பதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் சஜித் சூழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார். ரணில் விக்ரமசிங்கவும், சஜித் பிரேமதாசவும் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# எதிர்கால விவசாயச் செய்கைக்கு நீர்த் தட்டுப்பாடு ஏற்படமாட்டாது

## நீர்ப்பாசனப் பணிப்பாளர் தகவல்

(கொழும்பு)

நாட்டிலுள்ள பிரதான நீர்த் தேக்கங்களின் நீர்மட்டம் 2.9 மில்லியன் ஏக்கர் அடிகள் வரை உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக எதிர்காலத்தில் விவசாய நடவடிக்கைகளுக்கு எவ்வித தடைகளும் இன்றி நீரை விநியோகிக்க முடியும் என நீர்ப்பாசனப் பணிப்பாளர் கலாநிதி ஜீ.ஜீ.ஏ.கொடலியத்த தெரிவித்தார்.

எவ்வாறாயினும் புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டங்களின் சில பகுதிகளில் தொடர்ந்தும் நீர்த் தட்டுப்பாடு நிலவுவதாக அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் புத்தளம் இங்கினிமிட்டிய நீர்த்தேக்கத்தின் நீரைப் பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் வயல்களின் அளவு இம்முறை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த நீர்த்தேக்கத்தின் ஊடாக இம்முறை 1500 ஏக்கர் வயலில் மாத்திரமே நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

குருநாகல் கல்கமுவ வலயததிலும் நீர்த் தட்டுப்பாடு நிலவுவதோடு இந்தப் பகுதியில் மேலதிகப் பயிர்ச் செய்கை மாத்திரமே இம்முறை இடம்பெறுவ



தாக நீர்ப்பாசனப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இரவு நேர மின்வெட்டினால் வலி.கிழக்கு மக்கள் விசனம்

வலிகாமம் கிழக்குப் பகுதியில் அண்மை நாட்களாக இரவு வேளைகளில் இடம்பெற்று வரும் மின்வெட்டு காரணமாக பொதுமக்கள் பெரும் விசனமடைந்துள்ளனர். எவ்வித முன்னறிவித்தலுமின்றி திடீர் திடீரென நடைமுறைப்படுத்தப்படும் இரவுநேர மின்வெட்டினால் மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அநேகமாக ஒருநாளில் ஒருமுறை மாத்திரமன்றி இரு முறைகளுமே மின்வெட்டு இடம்பெறுவது பொதுமக்களுக்கு மேலும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றது. இது தொடர்பாக இலங்கை மின்சாரசபை அலுவலகத்துடன் தொடர்புகளை மேற்கொண்டு தகவல்பெற முயற்சிக்கும் வேளைகளில் அவர்களின் இணைப்புக்களை பெறுவது கடினமாக இருப்பதாகவும் தெரிவிக்கும் அப்பகுதி மககள், மின்வெட்டு நடவடிக்கைகளினால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்த்துக் கொள்ள மின்சார சபை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றனர். (03)

# தொற்றாத நோய்களினாலேயே இலங்கையில் பெருமளவு மரணம்

(கொழும்பு)

இலங்கையில் ஏற்படும் மரணங்களில் 65 சதவீதமானவை தொற்றாத நோய்களாலேயே இடம்பெறுவதாக சுகாதார கல்வி நிறுவகம் தெரிவித்துள்ளது.

நீரிழிவு நோய், அதிக ரத்த அழுத்தம், இருதயநோய், பக்க வாதம், உடலினுள்ளேயே வளர்ந்துவரும் நோய்க் காரணிகள், புற்றுநோய் போன்ற தொற்றாத நோய்களாலேயே இந்த மரணங்கள் ஏற்படுகின்றன.

இவ்வாறான மரணங்களில் 30 சதவீதத்திற்கும் அதிகமானவை மாரடைப்பினால் ஏற்படுவதாக சுகாதாரத்துறை புள்ளி விபரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது.

முறையான உணவுப் பழக்க வழக்கங்களைக் கடைபிடிக்காமை, நியமமான உடற்பயிற்சிகளை மேற்கொள்ளாமை, புகைத்தல், மது பாவனை மற்றும் மன ரீதியான தாக்கங்கள் போன்றவறறால் இவ்வாறான தொற்றாத நோய்கள் தாக்குவதற்கு காரணிகளாக அமைவதாக சுகாதார கல்வி நிறுவகம் சுட்டிக்காட்டியுள்ளது.

உலகளாவிய ரீதியில் 60 சதவீதமான மரணங்கள் இவ்வாறான நோய்த்தாக்கங்களாலேயே இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் விவசாயச் சமூகங்களிடையேயும், தொற்றாத நோய்வகைகள் தாக்கம் செலுத்தி வருவதாக சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

விவசாயிகள் மத்தியில் சிறுநீரகம் தொடர்பான நோய்கள், மாரடைப்பு, மனஉளைச்சல் போன்ற தொற்றாத நோய்கள் ஏற்பட்டு வருகின்றன.

தற்போதுள்ள, விவசாயி வியர்வையை மிகக் குறைவாகவே இழப்பதாக அவர் சுட்டிக் காட்டினார்.

புதிய தொழில் நுட்பங்களினால், இயந்திராதிகள் பயன்படுத்தப்படுவதன் காரணமாக விவசாயிக்கு கடினமாக தொழிற்படுவதற்கான வழிவகை ஏற்படவில்லை.

இவ்வாறான நிலைமைகளை கட்டுப்படுத்திக் கொள்வதற்கு எதிர்காலத்தில் சுகாதார அமைச்சு புதிய வேலைத்திட்டங்களை மேற்கொள்ளும் என அவர் குறிப்பிட்டார்.

# வீட்டுத் தோட்டச் செய்கை ஊக்குவிப்பு முன்னணி செய்கையாளர்களுக்கு கௌரவம்




(யாழ்ப்பாணம்)

விவசாயத் திணைக்களத்தினால் 2011 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட வீட்டுத் தோட்டப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில் வழங்கும் வைபவம் நேற்றுக் காலை 11.00 மணியளவில் திருநெல்வேலி விவசாயத் திணைக்கள மண்டபத்தில் யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் ஸ்ரீ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

கிராம மட்டம், பாடசாலை தோட்டம், அலுவலக தோட்டம் போன்ற அடிப்படையில் வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு மாவட்ட மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றவர்களுக்கு பணப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கையில் கைதடியைச் சேர்ந்த நடராஜா பரமேஸ்வரி முதலாம் இடத்தைப் பெற்று 10 ஆயிரம் ரூபா பணப்பரிசினையும், அலுவலகத் தோட்டத்தில் சங்கானை பிரதேச செயலகம் முதலாம் இடத்தையும், பாடசாலைத் தோட்டத்தில் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி முதலாம் இடத்தையும், கிராம தோட்டத்தில் சுழிபுரம் மேற்கு கிராம அலுவலர் முதலாம் இடத்தையும் பெற்றுக் கொண்டார்.

வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கையில் இரண்டாம் இடத்தைப் பெற்றவர்களுக்கு 7500 ரூபாவும், மூன்றாம் இடத்தைப் பெற்றவர்களுக்கு 5ஆயிரம் ரூபா பணப் பரிசும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் பிரதம விருந்தினராகவும், வடமாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், யாழ். பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி திருமதி சி.சிவச்சந்திரன் சிறப்பு விருந்தினராகவும், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் வ.அமிர்தலிங்கம், கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் எம்.பற்றிக் டிறஞ்சன், விவசாய ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி செ. விஜயரத்தினம், யாழ். மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் இ.மோகனேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (எஸ்)

# கடை உடைத்துத் திருட்டு 12 இளைஞர்களுக்கு வழக்கு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிப் பகுதியில் கடை உடைத்ததாக குற்றஞ் சாட்டப்பட்டு 12 இளைஞர்கள் கைது செய்யப்பட்டு யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டனர். அவர்களை 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுவிப்பதற்கு யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் அப்பகுதியில் உள்ள கடையை உடைத்ததாக அப்பகுதி இராணுவத்தினரால் குறித்த இளைஞர்கள் கைது செய்யப்பட்டு யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எஸ்,பா)

## காணி, பொலிஸ்...

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ரீ.ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட முடியாது என அரசாங்கம் குறிப்பிட முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சிறுபான்மை மக்களுக்கு கூடுதலான அதிகாரங்கள் அதாவது உச்சளவிலான அதிகாரப் பரவலாக்கல் வழங்கப்பட வேண்டுமென்பதே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு என அவர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் வெளிநாட்டு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளதாகவும், அவர் நாடு திரும்பியதன் பின்னர் கட்சியின் உயர்பீடம் விசேட கூட்டமொன்றை நடத்த உள்ளதாகத் தெரிவித்துள்ளார். அரசாங்கத்திடம் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை கோருவது தொடர்பில் இந்தக் கூட்டத்தின் பின்னர் தீர்மானிக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மொழிவிருத்திக்....

தேர்வுகளில் மொழித் தேர்ச்சி பெற்ற விரிவுரையாளர்களாலும் நடத்தப்படும். தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக்கடிதம் அனுப்பப்படவுள்ளது.

நேர்முகத் தேர்வின்போது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை, சேவைச் சான்றிதழ், 5 ரூபா முத்திரை ஒட்டப்பட்ட சுய விலாசமிடப்பட்ட கடித உறை, பயிற்சி நெறிக்கு செலுத்தப்பட்ட விண்ணப்பப் படிவ பரிசீலனைக் கட்டணம் 250 ரூபா, பதிவுக் கட்டணம் 800 ரூபா, பாடநெறிக் கட்டணமாகிய அரைவாசிக் கட்டணம் 5000 ரூபாவும் செலுத்திய இலங்கை வங்கி பற்றுச்சீட்டு ஆகியவை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இவற்றுக்குரிய மேலதிக விபரங்கள் மற்றும் பயிற்சி நெறி விண்ணப்பப் படிவம் விண்ணப்பப் படிவ அறிவுறுத்தல்களை எஸ்.பாலபவான், பிரதி அதிபர், மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: 0777703776) அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

## மனித உரிமைகள்....

தீர்வை வழங்குவதில் எமது அரசு உறுதியாக இருக்கின்றது. எமது இந்த நிலைப்பாட்டை இந்தியாவும் மதிக்கின்றது. அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பேச்சு நடத்தி நாம் நிச்சயமாகத் தீர்வொன்றைக் காண்போம். எமது இச்செயற்பாடுகள் குறித்து நாம் இந்தியாவுக்கு அவ்வப்போது தெளிவுபடுத்தி வருகிறோம்.

மனித உரிமை மீறல்கள், இறுதிப் போரின்போது இடம்பெற்றிருக்குமானால், அது குறித்து விசாரணை நடத்த எப்போதுமே தயாராகவே இருக்கின்றோம். கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக எமது நிலைப்பாடு தெளிவானது.

யாராவது தவறிழைத்திருந்தால் அவர்களுக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்படும். இலங்கையில் அமைதித் தீர்வு ஏற்படுவது தொடர்பாக இந்தியா காட்டும் அக்கறையை நாம் மதிக்கின்றோம் என்றும் பிரதி வெளிவிவகார அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

## பெண்ணின்...

சடலம் என உறவினர்களால் அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

அல்சர் வியாதியுடையவராகக் காணப்பட்ட இப்பெண் நோய் காரணமாகவே இவ்வாறு கிணற்றில் வீழ்ந்து தற்கொலை செய்திருக்கலாம் என்று உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

சட்ட வைத்திய அதிகாரியின் உடற் பரிசோதனையின் பின்னரே இச்சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## போதைப்பொருள்...

கண்காணிப்புக்கள் விரிவுபடுத்தப்படவுள்ளது என்றும் போதைப்பொருட்கள் கடல் வழியாக கடத்தப்படுவதாக சில தகவல்கள் தமக்கு கிடைத்திருப்பதாகவும் கடல் வலயங்களைக் கண்காணிப்பதற்கு கடற்படையினர் உஷார் நிலையில் செயற்படுகின்றனர்.

இதுதவிர வேறு வழிகளில் யாழ்ப்பாணத்திற்கு போதைப் பொருட்கள் கடத்தப்படுவதை அனுமதிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

## கீரிமலை...

இந்த நிலையில் கீரிமலை மயானம் பாவனைக்கு விடப்பட்டது. இதனைத் தொடர்ந்து குறித்த சடலம் அம்மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

## ஈழுப்...

நிம்மதியாக வாழ்கின்றார்கள் என்ற செய்தியை உலக சமூகத்திற்கு எடுத்துச் சொல்லக் கூடிய ஓர் சூழ்நிலையை இலங்கை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென கலாநிதி காமினி குணதிலக்க திவயின பத்திரிகைக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

# விநாயகர் சஷ்டி பூர்த்தி


(குருநகர்)

அளவெட்டி மேற்கு நாகேஸ்வரம், ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை விநாயகர் சஷ்டி பூர்த்தி நிகழ்வும், திருவெம்பாவை பூசைகள் ஆரம்பமும் பக்திபூர்வமாக நடைபெறவுள்ளது.

அதிகாலை 6.00 மணிக்கு திருவெம்பாவை பூசைகள் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகும். திருவெம்பாவை 10 விருத்தங்களும் பாடப்பட்டு மாணிக்கவாசகப் பெருமானுக்கு அபிஷேக பூசைகள் செய்யப்படும்.

அன்றைய தினம் மாலை 5.00 மணிக்கு விநாயகர் பெரும் கதையின் இறுதிப்படலம் வாசிக்கப்பட்டு அபிஷேக ஆராதனைகள் முடிவில் விநாயகர் வீதியுலா எழுந்து அடியார்களுக்கு அருள் பாலிக்கும் நிகழ்வும் இடம் பெறும். (68)

# இரண்டாவது டெஸ்ட்டில் இலங்கை அணி முன்னிலை



(டர்பன்)

இலங்கை அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தனது முதலாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி மிக மோசமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி 168 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்துள்ளது. தென்னாபிரிக்க அணி சார்பில் துடுப்பாட்டத்தில் ஹசிம் அம்லா மாத்திரம் 54 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் இலங்கை அணியின் வெலகெதர 5, ஹேரத் 4 விக்கெட்டுக்களைப் பெற்றனர். முன்னதாக தமது முதலாவது இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 338 ஓட்டங்களைப் பெற்றது. இலங்கை அணி சார்பில் துடுப்பாட்டத்தில் முன்வரிசை வீரர்கள் எவரும் பெரிதாக சோபிக்காத நிலையில் மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர் சமரவீர 102 ஓட்டங்களைப் பெற்று இலங்கை அணியை வலுவான நிலைக்கு கொண்டு சென்றுள்ளார்.

மேலும் சந்திமால் 58 ஓட்டங்களைப் பெற்று சமரவீரவிற்கு ஒத்துழைப்பு வழங்கினார். பந்து வீச்சில் தென்னாபிரிக்க அறிமுக வீரர் எம்.டி.லான்ஜே 7 விக்கெட்களை வீழ்த்தி பிரகாசித்துள்ளார். இதன்படி இலங்கை அணி தென்னாபிரிக்காவை விட 170 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது.

# பரீட்சைப் பெறுபேறுகள் வலுவடைகிறது சர்ச்சை

(கொழும்பு)

இம்முறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பான சர்ச்சைகள் நாளுக்குநாள் வலுவடைந்து வருகின்றது.

மாணவர்கள் பரீட்சைகளில் தோற்றாத பாடங்களுக்கான பெறுபேறுகளும் இம்முறை வழங்கப்பட்டுள்ளமையே இதற்குக் காரணமாகும். கணிதப்பிரிவில் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் தோன்றிய மாணவர் ஒருவருக்கு கணிதப் பாடத்துக்கான பெறுபேறுடன், புவியியல் மற்றும் சிங்களம் ஆகிய பாடங்களுக்கான பெறுபேறுகளும் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைய வெளியிடப்பட்ட மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலான நிரல்படுத்தலை இரத்துச் செய்வதாக உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன நேற்று அறிவித்திருந்தார்.

எனினும் Z புள்ளிகளிலோ பாடங்களுக்கான பெறுபேறுகளிலோ எவ்வித தவறுகளும் இல்லை என உயர்கல்வி அமைச்சின் செயலாளர் வலியுறுத்தியிருந்தார். இதேவேளை உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட்ட முறைமை குறித்து விசாரணைகளை நடத்துவதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கருத்து வெளியிட்ட போதே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை கணினிமயப்படுத்தும் செயற்பாட்டின் போது தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதனால் ஏற்பட்ட தவறுகளை திருத்துவதற்கு பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் உயர்கல்வி அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

## முத்தரப்பு...

பேச்சுவார்த்தைகளில் பங்கேற்க வேண்டுமாயின் ஜனாதிபதியின் அனுமதி தேவை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

# யாழில் 2011 டிசம்பர் 20 வரை 36 தற்கொலைச் சம்பவங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 2011 ஜனவரி மாதம் முதல் வாரத்திலிருந்து டிசம்பர் 20ஆம் திகதி வரையில் 36 தற்கொலை மரணங்கள் நடைபெற்றுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை மரண பதிவு மற்றும் மரணங்கள் தொடர்பான விசாரணை அறிக்கையின் புள்ளிவிபரத் தரவுகள் குறிப்பிடுகின்றன.

தற்கொலை மரணங்கள் தொடர்பான பதிவுகளின்படி 24 பெண்களும் 12 ஆண்களும் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக அந்தப் புள்ளிவிபரத் தரவு அறிக்கை மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்.போதனா வைத்தியசாலையின் தற்கொலை மரண அறிக்கையின் பிரகாரம் இளவயது குடும்பத்தினர் அதிகமாக இருப்பதாகவும், இவர்களின் குடும்பங்கள் பொருளாதார ரீதியில் பின்னடைவுகளை எதிர்நோக்கியதாகவும் குடும்பப் பிணக்கு அல்லது மன அழுத்தம், தாங்க முடியாத அதிர்ச்சி, எதிர்காலம் பற்றிய நம்பிக்கையின்மை, விரக்தி போன்ற காரணங்களாக இவர்களின் தற்கொலை அமைந்திருக்கலாம் என தற்கொலைக்குப் பின்னரான மரண விசாரணை அறிக்கை குறிப்பிடுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, விபத்துக்களில் இறந்தவர் தொகை அதிகமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஒளிவிழா நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையினரது ஒளிவிழா நிகழ்வுகள் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு யாழ்.மாநகர சபை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகவும், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாண சபையின் பிரதம செயலாளர். திருமதி ர.விஜயலட்சுமி ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

✧ ✧ ✧ ✧ ✧

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் ஒளிவிழா நிகழ்வுகள் இன்று காலை 10.00 மணிக்கு நிர்வாகக் கிளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (109)

## யாழ்ப்பாணத் திருவிழா - தைப்பொங்கல் 2012

(யாழ்ப்பாணம்)

தமிழர் பண்பாட்டு விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட தலைப்பில் கவிதை, கட்டுரை, பேச்சு போட்டிகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி இன்று காலை 9.00 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறும் என்பதை போட்டியில் பங்குபற்றும் அனைவருக்கும் அறியத்தருகின்றோம் என யாழ்.மாநகர முதல்வர் அறிவித்துள்ளார்.

## கிணற்றில் பெண்ணின் சடலம் யாழில் நேற்று பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

மூடப்பட்டிருந்த கிணற்றில் இருந்து வயோதிபப் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கச்சேரி - நல்லூர் வீதிப் பகுதியில் அமைந்துள்ள வீட்டில் வசித்த செல்லத்துரை செல்லம்மா (வயது-88) என்ற வயோதிப பெண்மணியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, குறித்த வீட்டில் இருந்த மேற்படி வயோதிபப் பெண் நேற்றுக் காலை 11.00 மணிக்கு தண்ணீர் எடுப்பதற்காக கிணற்றடிக்குச் சென்றுள்ளார். அதன் பின் அவர் திரும்பி வரவில்லை. பின்னர் சடலமாக மீட்கப்பட்டார். நேற்று சம்பவ இடத்திற்கு சென்ற திடீர் மரண விசாரணை அதிகாரி பார்வையிட்டு சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (எஸ்)

## ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல்

யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்ட லலித்குமார் வீரராஜ், குகன் முருகானந்தன் ஆகியோர் தொடர்பாக ஆட்கொணர்வு மனுக்களை அவர்களின் குடும்பத்தினர் தாக்கல் செய்துள்ளனர். குகன் முருகானந்தனின் மனைவியும் லலித் குமார் வீரராஜின் தந்தையும் இம்மனுக்களை மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்தனர். இராணுவத் தளபதி, யாழ் இராணுவத் தளபதி, பொலிஸ் மா அதிபர், சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக இம்மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## முப்பது இலட்சம் ரூபா ஆயுத முனையில் கொள்ளை

(காலி)

காலி கோட்டை பிரதேசத்தில் தனியார் வங்கி ஒன்றில் வைப்பிலிடுவதற்கு எடுத்துச் சென்ற 30 இலட்சம் ரூபாவை ஆயுதம் ஏந்திய ஒருவர் கொள்ளையிட்டுச் சென்றுள்ளார். நேற்று முற்பகல் 11.30 மணி அளவில் பணத்தை எடுத்துச்சென்ற வாகனத்தை வழிமறித்த சந்தேகநபர் ஆயுத முனையில் பணத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். தப்பிச் சென்ற சந்தேகநபர் இதுவரை அடையாளங்காணப்படவில்லை. சட்டவிரோத ஆயுதங்களின் பாவனை தெற்கில் முழுமையாக தடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பெண்ணுடன் நடனம் பறிபோனது காது

(கொழும்பு)

கொழும்பிலுள்ள நட்சத்திர ஹோட்டலொன்றில் வைத்து இலங்கையர் ஒருவரின் காதை பிரித்தானிய பிரஜையொருவர் கடித்து துண்டாக்கியதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பிரித்தானிய பிரஜை கோட்டை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு, கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். களுபோவிலயைச் சேர்ந்த ஒருவரே மைக்டைசன் பாணியிலான இந்நடவடிக்கை குறித்த முறைப்பாட்டைச் செய்துள்ளார். கொழும்பிலுள்ள ஹோட்டலில் நடைபெற்ற விருந்தொன்றின்போது மேற்படி பிரித்தானிய பிரஜை தனது காதை கடித்து துண்டாக்கியதாக அவர் கூறியுள்ளார். இத்தாக்குதல் நடைபெற்றபோது வெளிநாட்டுப் பெண்ணொருவர் தம்முடன் நடனமாடிக்கொண்டிருந்ததாகவும் அவர்கூறியுள்ளார்.

## இலங்கையில் முதன் முதலாக விமான ஓட்டிக்கான உயர்கற்கை

(கொழும்பு)

இலங்கையில் முதன் முதலாக கேற்வே தனியார் கல்வி நிறுவனம் விமான ஒட்டிகளுக்கான பட்டப்படிப்பு கற்கை நெறியை ஆரம்பிக்கவுள்ளது.

இக்கற்கை நெறியை இங்கிலாந்துப் பல்கலைக்கழகம் ஒன்றுடன் இணைந்து மேற்கொள்வதற்கான ஒப்பந்தத்தை எதிர்வரும பெப்ரவரியில் மேற்கொள்ளவுள்ளது.

இதுவரை காலமும் இலங்கை மாணவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றே இக்கற்கையை மேற்கொண்டிருந்தனர். இலங்கையில் ஆரம்பிக்கப்படவிருப்பதால் அதிகளவான மாணவர்கள் குறைந்த செலவில் இக்கற்கையைப் மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 2012 செப்ரெம்பரில் தொடங்கவிருக்கும் கற்கை நெறிமையம் இரத்மலான வானூர்தி தளத்தில் செயற்படவுள்ளது. இலங்கையின் இரண்டாவது சர்வதெச விமான நிலையம் அம் பாந்தோட்டையில் அமைய இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## தனிமையில் இருந்த பெண் கழுத்து வெட்டிப் படுகொலை

(வாழைச்சேனை)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடியில் நேற்று முன்தினம் இரவு வயோதிபப் பெண் ஒருவர் கழுத்து அறுக்கப்பட்ட நிலையில் அவரது வீட்டு வளவிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ஓட்டமாவடி - 01 குறிச்சி, புஹாரி மௌலவி வீதியை சேர்ந்த வெள்ளக்குட்டி வெள்ளையும்மா (வயது-64) என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார். அவரின் கணவர் வியாபார நடவடிக்கைகளுக்காக வெளியில் சென்றிருந்ததாகவும் சம்பவம் நடைபெற்ற சமயம் அவர் வீட்டில் தனிமையில் இருந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். சடலம் வாழைச்சேனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



(கொழும்பு)

தியத்தலாவை படைத்துறை பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த 194 படையினர் தங்களது பயிற்சிகளை முடித்துக் கொண்டு நேற்று வெளியேறியுள்ளனர். மாலைதீவு ஜனாதிபதி முஹம்மட் நசீத் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இந் நிகழ்வில் இலங்கையின் படைத்துறைச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் படைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய உள்ளிட்ட உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## செட்டிப்புலம் முன்பள்ளி சிறுவர் தின் விழா



(வேலணை)

செட்டிப்புலம் முன்பள்ளிச் சிறார்களின் குழந்தைகள் தின நிகழ்வு நேற்று முன்தினம் செட்டிப்புலம் முன்பள்ளி ஆசிரியரும் முன்பள்ளிகளின் தலைவருமான த.திருவாமடன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், வேலணை பிதேசசபையின் தலைவரும், ஈ.பி.டி.பி. பிரதேச அமைப்பாளருமான சி.சிவராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

தொடர்ந்து கௌரவ விருந்தினர்களாக செட்டிப்புலம் அ.த.க. பாடசாலை அதிபரும், முன்பள்ளி இணைப்பாளரும், செட்டிப்புலம் ஐயனார் கோவில் தலைவருமான திருநாவுக்கரசு, செட்டிப்புலம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க தலைவர் விசுவலிங்கம் அப்புராசா, செட்டிப்புலம் சனசமூக நிலைய தலைவர் மார்க்கண்டுதாசன் மற்றும் செட்டிப்புலம் விளையாட்டுக் கழகத் தலைவர் பாஸ்கரன் ஆகியோரும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். (85)

## கல்வி முதுமாணி கற்கை முதல் தடவையாக யாழில்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி முதுமாணிக் கற்கை நெறி எதிர்வரும் ஜனவரி 19ஆம் திகதி யாழில் முதல்தடவையாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ் ஆரம்ப வைபவத்தில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன, தேசிய கல்வி நிறுவனப் பணிப்பாளர் பேராசிரியர் டபிள்யூ. எம். அபேரத்னா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இதுவரை காலமும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலேயே இக்கல்வியை பெற்றிருந்தனர் இனிவரும் காலங்களில் குறைந்த செலவில் யாழில் கல்வி முதுமாணி கற்கையை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இக்கற்கையை யாழில் ஆரம்பிப்பதற்கு தேசிய கல்வி நிறுவக முதுநிலை நிபுணத்துவ ஆலோசகர் கலாநிதி நா.தணிகாசலம்பிள்ளை மேற்கொண்டிருந்தார்.

இதேவேளை, 1991 ஆம் ஆண்டில் கல்வி டிப்ளோமா கற்கையை யாழில் ஆரம்பித்த செயற்பாடுகளில் இவர் முக்கிய பங்காற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

## தூதரகத்தில் தீ

(கொழும்பு)

கொழும்பிலுள்ள ரஷ்ய தூதரகத்தில் தீ விபத்தொன்று ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இத்தீயினால் எவரும் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்படவில்லை. இருந்தும் சேத விபரங்கள் முழுமையாக வெளிவரவில்லை.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 டிசம்பர் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.